Find us on facebook/tamilmirror   Follow us on tamilmirror   epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

FRIDAY, FEBRUARY 16, 2024

வெள்ளிக்கிழமை பெப்ரவரி 16, 2024 | ஒளி: 09 கதிர் 194 | பக்கம்:07 | நகரப்பதிப்பு★ | FREE



## பனிக்கூழில் பாயமுடியாது தவித்த தவளை

■ எம்.றொசாந்த்

தவளை என்றால் தாவி, தாவி பாய்ந்து கொண்டிருக்கும் சுபாவம் உடையது. எனினும், பனிக்கூழுக்குள் (ஐஸ் கிரீம்) கிடந்த தவளையொன்று பாயமுடியாது உறைந்து கிடந்த சம்பவமொன்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்தில் ஐஸ்கிரீம் விற்பனை நிலையம் ஒன்றில் விற்கப்பட்ட ஐஸ்கிரீமில் தவளை ஒன்று காணப்பட்ட சம்பவம் தொடர்பில் சுகாதார பரிசோதகர்களினால் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

முழுச் செய்தி P2

19ஆம் திகதி மாநாட்டை நடத்த

# வீட்டுக்கு தடை

### யாழ்ப்பாணம், திருகோணமலை மாவட்ட நீதிமன்றங்கள் உத்தரவு



■ அப்துல்சலாம் யாசீம், நிதர்ஷன் வினோத்

இலங்கை தமிழரசு கட்சியின் மாநாட்டை நடத்துவதற்கு யாழ். மாவட்ட நீதிமன்றம் மற்றும் திருகோணமலை மாவட்ட நீதிமன்றம் ஆகிய இரண்டு நீதிமன்றங்களும் வியாழக்கிழமை (15) தடைவிதித்துள்ளன.

வீடு சின்னத்தை கொண்ட, இலங்கை தமிழரசுக் கட்சியின் மாநாடு எதிர்வரும் 19ஆம் திகதி நடைபெறவிருந்த நிலையில் இவ்வாறு தடையுத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

முழுச் செய்தி P2


## இணுவில் கோர விபத்தில் தந்தை, கைக்குழந்தை பலி

■ நிதர்ஷன் வினோத்

யாழ்ப்பாணம் - இணுவில் பகுதியில் ரயிலுடன் மோதி வானொன்று விபத்துக்குள்ளானதில் இருவர் உயிரிழந்துள்ளனர். இந்த சம்பவம், த்து புதன்க்கிழமை(14) மாலை இடம்பெற்றுள்ளது.

வானில் பயணித்த மூவர் படுகாயமடைந்த நிலையில், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். இதில் குழந்தையொன்று உட்பட இருவர் உயிரிழந்துள்ளனர்.

முழுச் செய்தி P12



## இன்று முடிந்து திங்கள் திறப்பு

அரச மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளின் 2023ஆம் ஆண்டுக்கான மூன்றாம் தவணை, வெள்ளிக்கிழமையுடன் (16) முடிவடையும் என்று கல்வியமைச்சு அறிவித்துள்ளது.

அதன்படி, 2024ஆம் ஆண்டுக்கான முதலாம் தவணை, பெப்ரவரி 19ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகும் என்றும் அறிவித்துள்ளது.

## "பிரிந்திருந்து நாட்டை கட்டியெழுப்ப முடியாது"



அரசியல் ரீதியாகப் பிரிந்து நாட்டைக் கட்டியெழுப்பமுடியாது எனவும் அரசாங்கத்திற்காகவோ எதிர்க்கட்சிக்காகவோ அல்லாது நாட்டு மக்களுக்கு வளமான வாழ்க்கைத் தரத்தை வழங்குவதற்கு அனைத்து தரப்பினரையும் ஒன்றிணையுமாறு மீண்டும் அழைப்பு விடுப்பதாகவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

முழுச் செய்தி P2

## 'அஸ்வெசும'வுக்கு விண்ணப்பிக்கவும்

'அஸ்வெசும' இரண்டாம் கட்டத்திற்காக, பெப்ரவரி, வியாழக்கிழமை (15) முதல் மார்ச் 15ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் எனவும், தகுதிபெறும் அனைவருக்கும் அஸ்வெசும நன்மைகள் எதுவித தடங்கலும் இன்றி வழங்கப்படும் எனவும் நலன்புரி நன்மைகள் சபையின் தலைவர் ஜெயந்த விஜேரத்ன தெரிவித்தார்.

முழுச் செய்தி P2

## "கதிரையில் அமர தீர்மானிக்கவில்லை"

### ஊடகங்களில் வெளியாகும் செய்திகள் பொய்யானவை



எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ள வேட்பாளருக்கு ஆதரவளிப்பது தொடர்பில் தான் இன்னும் தீர்மானிக்கவில்லை எனவும் அவ்வாறு தான் தீர்மானித்துள்ளதாக ஊடகங்களில் வெளியாகும் செய்திகள் பொய்யானவை என்றும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

முழுச் செய்தி P2

## 'குடு சலிந்து'வின் சீடர் 'பியூமா' டுபாயில் கைது

■ டி.கே.பி. கபில



'பியூமா' என்றழைக்கப்படும் பியூம் ஹசிதிகவை டுபாயில் கைது செய்த விசேட குற்ற திணைக்களத்தின் அதிகாரிகள், அவரை, வியாழக்கிழமை (15) காலை நாட்டுக்கு அழைத்து வந்துள்ளனர்.

இவர், குற்றப்புலனாய்வு பிரிவினரால் தற்போது கைது செய்யப்பட்டிருக்கும் 'குடு சலிந்து' என்றழைக்கப்படும் சலிந்து மல்சிக்க குழுவின் பிரதான சீடர் ஆவார்.

முழுச் செய்தி P2

## காற்று துப்பாக்கி வழங்க ஏற்பாடு



குரங்குகளால் விவசாயத்துக்கு ஏற்படுத்தப்படும் சேதத்தை குறைப்பதற்காக, கேகாலை மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட விவசாய அமைப்புகளுக்கு காற்று துப்பாக்கிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

முழுச் செய்தி P2



## கண்டி விபத்தில் ஒருவர் பலி

### ஜீப் வண்டி ஒன்று மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்து

கண்டி- குருநாகல் வீதியில் அலதெனிய நகருக்கு அருகில் வியாழக்கிழமை (15) ஜீப் வண்டி ஒன்று மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் இடம்பெற்ற வீதி விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான 43 வயதான நபர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

குருநாகல் மல்சிறிபுர பிரதேசத்தைச் சேர்ந்த அனுரகிர்த்தி பண்டார என்பவரே உயிரிழந்துள்ளார். படுகாயமடைந்த அவரது மனைவி கண்டி பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

முழுச் செய்தி P2



3 மாணவிகளை வன்புணர்வதற்கு

## வித்தியாசமாக கோரிய விஞ்ஞான ஆசிரியர் கைது

■ ரஞ்சித் ராஜபக்ஷ

3 மாணவிகளைத் துஷ்பிரயோகம் செய்வதற்கு முயற்சித்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில், விஞ்ஞான பாட ஆசிரியர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஹட்டன் கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலையைச் சேர்ந்த ஆசிரியரே இவ்வாறு, வியாழக்கிழமை (15) கைது செய்யப்பட்டுள்ளார் என வட்டவளை பொலிஸார் தெரிவித்தனர்.

தரம் 10 இல் கல்விப்பயிலும் மூன்று மாணவிகளை பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்த முயற்சித்தார் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே இவர், கைது செய்யப்பட்டுள்ளார் என வட்டவளை பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரியான பொலிஸ் பரிசோதகர் சந்தன கமகே தெரிவித்தார்.

முழுச் செய்தி P2



## மலசலக்கூட கட்டணம்

50 ரூபாவாக அதிகரிப்பு

தூரப் பிரதேசங்களில் இருந்து கொழும்புக்கு வருகை தருவோர், தங்களுடைய வேலைகளை முடித்துக்கொண்டு, பொது போக்குவரத்தின் ஊடாக தங்களுடைய வீடுகளுக்கு திரும்புவதற்கு முன்னர், அவசர தேவைகளுக்காக பொது மலசலக்கூடத்தையே பயன்படுத்துவர்.

புறக்கோட்டை பெஸ்டியன் மாவத்தையில் உள்ள பொது மலசலக்கூடத்தைப் பயன்படுத்துவோரிடம், அறவிடப்படும் கட்டணம் திடீரென 50 ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளது என பயணிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

முழுச் செய்தி P2



காதலர் தினத்தில்

## முன்னாள் காதலனுக்கு காதலி கொடுத்த பரிசு

காதலர் தினமான பெப்ரவரி 14ஆம் திகதியன்று பெண்ணொருவர் தன்னுடைய முன்னாள் காதலனுக்கு மறக்கமுடியாத வகையில் பரிசு கொடுத்துள்ள சம்பவம் தெற்கில் இடம்பெற்றுள்ளது.

அந்தப் பெண் தனது கணவனை அழைத்து தனது முன்னாள் காதலனை நிர்வாணமாக்கி இரண்டு கால்களையும் துண்டித்துள்ளனர் என காலி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தொடநடுவ பிரதேசத்தைச் சேர்ந்த யுவதி ஒருவர் கடந்த 10 வருடங்களுக்கு முன்னர் காலி தொழில்நுட்பக் கல்லூரியில் கல்வி கற்கும்போது, ஹிக்கடுவ களுபே பிரதேசத்தைச் சேர்ந்த இளைஞன் ஒருவருடன் காதல் உறவை வளர்த்துக் கொண்டுள்ளார். தொழிற்கல்வியில் பட்டம் பெற்ற பிறகும் அவர்கள் சில காலம் காதல் உறவில் இருந்ததாக கூறப்படுகிறது.

முழுச் செய்தி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## பனிக்கூழில் பாயமுடியாது தவித்த தவளை

செல்லவச்சந்நிதி முருகன் கோவிலின் சூழலில் உள்ள ஐஸ்கிரீம் விற்பனை நிலையத்தில், புதன்கிழமை (14) ஒருவர் ஐஸ்கிரீம் ஒன்றினை வாங்கியவேளை, அதனுள் தவளை ஒன்று காணப்பட்டுள்ளது.

இது தொடர்பில் சுகாதார பிரிவினருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து உத்தியோகஸ்தர்கள் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

யாழில் தற்போது அதிகளவான வெப்பமான கால நிலை நிலவுவதனால், சந்நிதி ஆலயத்திற்குச் செல்வோர் அருகில் உள்ள உணவகங்களில் குளிர்பானங்களையும், ஐஸ்கிரீம் விற்பனை நிலையங்களில் ஐஸ்கிரீம்களையும் கொள்வனவு செய்து பருகி வருகின்றனர்.

இந்நிலையில் குறித்த உணவகங்கள் மற்றும் ஐஸ்கிரீம் விற்பனை நிலையங்களின் சுகாதாரம் மற்றும் நீரின் தூய்மை என்பவை தொடர்பில் சுகாதார பரிசோதகர்கள் கவனம் செலுத்தி, சோதனை நடவடிக்கையில் ஈடுபட வேண்டுமெனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## வீட்டுக்கு தடை

இவ்விரு நீதிமன்றங்களிலும், இலங்கை தமிழரசுக் கட்சியின் மாநாட்டுக்கு எதிராக உறுப்பினர்கள் இருவர் மனுத்தாக்கல் செய்திருந்தனர்.

இந்த மனுக்களில், இலங்கை தமிழரசுக் கட்சியின் முன்னாள் தலைவர் மாவை சேனாதிராஜா, புதிய தலைவர் எஸ். ஸ்ரீதரன், ஜனாதிபதி சட்டத்தரணியும் எம்.பியுமான எம்.ஏ.சுமந்திரன், சண்முகம் குகதாசன் உட்பட தமிழரசுக் கட்சியின் ஏழு முக்கியஸ்தர்கள் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

திருகோணமலை மாவட்ட நீதிமன்றம் பிறப்பித்துள்ள இடைக்காலத் தடை உத்தரவில், இம்மாநாட்டை இரண்டு வாரங்களுக்கு நடத்த வேண்டுமெனக் கட்டளை பிறப்பித்துள்ளது.

திருகோணமலை மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா முன்னிலையில் இந்த மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போதே, 14 நாட்களுக்கு அமுலில் இருக்கும் வகையில் இடைக்கால கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மனுதாரரின் சார்பில், சட்டத்தரணி ஐஸ்வர்யா சிவக்குமாருடன் ஜனாதிபதி சட்டத்தரணி ஜெப்ரி அழகரட்ணம் மற்றும் சட்டத்தரணி புரந்தன் ஆகியோர் ஆஜராகினர்.

இலங்கை தமிழரசு கட்சியினால் கடந்த 21 மற்றும் 27ம் திகதிகளில் நடை பெற்ற பொதுச் சபைக் கூட்டங்கள் சட்டத்துக்கு முரணானதும், செல்லுபடியற்றதாகும் . எனவே, குறித்த இரண்டு பொதுச் சபைக் கூட்டங்களிலும் மேற்கொள்ளப்பட்ட தெரிவுகள் சட்டத்திற்கு முரணானதும் செல்லுபடியற்றது எனவும் வாதம் முன்வைக்கப்பட்டது.

தமிழரசு கட்சியின் அமைப்பு விதியில் அனுமதிக்கின்ற தொகையை விட அதிகளவான உறுப்பினர்கள் பொதுச் சபைக் கூட்டங்களில் பங்குபற்றிக் குறித்த தெரிவுகளின்போது வாக்களித்துள்ளமையினால் குறித்த கூட்டம் சட்ட முரணானது எனவும் நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

குறித்த சமர்ப்பணங்களை அவதானித்த நீதிமன்றம், எதிர்வரும் 19ஆம் திகதி நடைபெறவிருந்த மாநாட்டுக்கு, திருகோணமலையில் மாவட்ட நீதிமன்றம் இரு வாரங்களுக்கு இடைக்காலத் தடை உத்தரவு விதித்துள்ளது.

இந்த வழக்கு பெப்ரவரி மாதம் 29ஆம் திகதி திறந்த நீதிமன்றில் மீண்டும் அழைக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இவ்வழக்கினை திருகோணமலை சாம்பல்தீவு, கோணேஷபுரியைச் சேர்ந்த சந்திரசேகரம் பரா என்பவர் சட்டத்தரணி ஐஸ்வர்யா சிவகுமார் ஊடாக இந்த மனுவைத் தாக்கல் செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## “பிரிந்திருந்து நாட்டை கட்டியெழுப்ப முடியாது”

அநுராதபுரம் வடக்கு நீர் வழங்கல் திட்டத்தின் முதற்கட்ட திறப்பு விழா,வியாழக்கிழமை (15) நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்துரைத்த போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அநுராதபுரம் வடக்கு நீர் வழங்கல் திட்டத்தினால் பிரதேசத்தின் விவசாய நடவடிக்கைகளுக்கும் குடிநீர்த் தேவைக்கும் தீர்வு கிடைக்கும் எனவும் பல்வேறு தரப்பினர் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டபோதும் இந்த திட்டத்தினால் விவசாயத்திற்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாது என தான் உறுதியளிப்பதாகவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வலியுறுத்தினார்

இங்கு கருத்துரைத்த நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான்,

நாடு நெருக்கடியான சூழலை எதிர்கொண்ட போது தயக்கமின்றி நாட்டின் தலைமைப் பொறுப்பை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஏற்றுக்கொண்டதாகவும், நாட்டை மீண்டும் ஸ்திரமற்ற நிலைக்குக் கொண்டு செல்வதற்கு இடமளிக்காமல் பொருளாதாரத்தைச் சரியான பாதையில் இட்டுச் செல்வதற்கு ஜனாதிபதியைப் பாராட்ட வேண்டும் என்றார்.

## இணுவில் கோர விபத்தில் தந்தை, கைக்குழந்தை பலி

பெண்ணொருவர் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த விபத்தில் இணுவில் பகுதியைச் சேர்ந்த 32 வயதுடைய சயந்தன் மற்றும் அவரது மகளான 6 மாத குழந்தை அப்சரா ஆகியோரே உயிரிழந்துள்ளனர்.

விபத்து இடம்பெற்ற இடத்தில் புகையிரத கடவை காப்பாளர் இல்லாததே விபத்துக்குக் காரணம் என பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

## ‘அஸ்வெசும’வுக்கு விண்ணப்பிக்கவும்

முதற்கட்டத்தில் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்காத குடும்பங்கள் மற்றும் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தும் வீட்டுத் தகவல் கணக்கெடுப்புக்கு உட்படுத்தப்படாத எந்தவொரு நபர்களும் இரண்டாம் கட்டத்திற்கு விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

## “கதிரையில் அமர தீர்மானிக்கவில்லை”

அத்துடன், புதிதாக உருவாக்கப்பட்டுள்ள பொதுஜன ஐக்கிய பெரமுன (கதிரை சின்னம்) கூட்டணியின் தலைமைத்துவத்தை எடுப்பது குறித்து தாம் இன்னும் தீர்மானம் எடுக்கவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

## ‘குடு சலிந்து’வின் சீடர் ‘பியூமா’டுபாயில் கைது



‘குடு சலிந்து’ ஒருங்கமைக்கப்பட்ட குற்றச்செயல்களை முன்னெடுக்கும் குழுவின் தலைவர் ஆவார்.

‘பியூமா’ என்பவர், ‘குடு சலிந்து’வுக்காக, டுபாயில் தங்கியிருந்து. இந்நாட்டில் போதைப்பொருள் வர்த்தகத்தை முன்னெடுத்துள்ளார் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

டுபாயில் இருந்து வந்த ஸ்ரீ லங்கன் விமானச் சேவைக்குச் சொந்தமான யு.எல்.226 ரக விமானத்தில் வியாழக்கிழமை (15) அதிகாலை, 4.50 மணியளவில் நாட்டுக்கு அழைத்துவரப்பட்டார்.

கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில், காலை 8 மணிவரையிலும் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டதன் பின்னர், கடுமையான பாதுகாப்புக்கு மத்தியில் கொழும்பு குற்ற விசாரணை திணைக்களத்தின் தலைமையத்துக்கு அழைத்துவரப்பட்டார்.

## காற்று துப்பாக்கி வழங்க ஏற்பாடு

பயிர்கள் மீண்டும், மீண்டும் சேதமடைவதால் விவசாயிகள் பெரும் பிரச்சினையை எதிர்நோக்கியுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார். தனது பரவலாக்கப்பட்ட நிதியில் இருந்து இந்த காற்று துப்பாக்கிகளை வழங்கப்படும் என்றும் அமைச்சர் கூறினார்.



## கண்டி விபத்தில் ஒருவர் பலி

இந்த தம்பதியினர் மல்சிறிபுரவில் இருந்து கண்டி வைத்தியசாலைக்கு மோட்டார் சைக்கிளில் வியாழக்கிழமை (15) பயணித்தபோது, ராஜகிரிய கலபலுவல பிரதேசத்தில் இருந்து குருநாகல் நோக்கி பயணித்த ஜீப் வண்டியுடன் மோதி விபத்துக்கு உள்ளாகினர் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது என பொலிஸார் தெரிவித்தனர்.



## முன்னாள் காதலனுக்கு காதலி கொடுத்த பரிசு

பின்னர் அப்பெண் வேறொருவரைத் திருமணம் செய்து கொண்டார், அவரது பழைய காதலரும் அவளுடன் உறவைப் பேணி வந்தார். எனினும், முன்னாள் காதலன், அப்பெண்ணுக்கு தொலைபேசி அழைப்புகளை எடுத்துள்ளார். அவளுக்கு அடிக்கடி தொலைபேசி அழைப்புகள் வருவது பின்னாளில் தொல்லையாக மாறியுள்ளதாகவும், அதேவேளை, தனது முன்னாள் காதலனிடம் இருந்து வரும் தொலைபேசி அழைப்புகளைக் கணவனும் செவிமடுத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்த அழைப்புகளை எப்படி நிறுத்துவது என்று அவரது கணவர் அறிவுறுத்தினார், மேலும் அவர் தனது முன்னாள் காதலனின் தொலைபேசி அழைப்பிற்கு அன்பாகப் பதிலளித்தார்.

“சரி நீ தாடல்லா கடற்கரைக்கு வா நான் வருகின்றேன்” அதன்படி தாடல்லா கடற்கரைக்கு வந்ததும் கணவர் குண்டாந்தடியால் அடித்து கால்களை உடைத்துள்ளார். அத்துடன் நிர்வாணமாக்கிவிட்டார்.

## வித்தியாசமாக கோரிய விஞ்ஞான ஆசிரியர் கைது



சுமார் 5 வருடங்களாக அந்தப் பாடசாலையில் விஞ்ஞான ஆசிரியராக சேவையாற்றும் இந்த ஆசிரியர், இந்த மூன்று மாணவிகளிடமும் பாலியல் அழுத்தத்தைப் பிரயோகித்து குறுஞ்செய்திகள் பலவற்றை அனுப்பியுள்ளார்.

அந்த குறுஞ்செய்திகளுக்குப் பாடசாலை மாணவிகள் மூவரும் பதிலளிக்கவில்லை.

இதனால் ஆத்திரமடைந்த அந்த ஆசிரியர், மாணவிகளின் வகுப்பறைக்குச் சென்று, அந்த மாணவிகள் அமர்ந்திருக்கும் கதிரைகளுக்கு முன்பாக இருக்கும் மேசைகளின் மேல், “என்னுடைய யோசனைக்கு இணக்கமா?” என எழுதியுள்ளார்.

இதனால், மனதளவில் பாதிக்கப்பட்ட மாணவிகள் மூவரும் வட்டவளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். அதனடிப்படையிலேயே விஞ்ஞான ஆசிரியர் கைது செய்யப்பட்டுள்ளார் என வட்டவளை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட விஞ்ஞான பாட ஆசிரியர் 44 வயதானவர் என்றும் அவர் இரண்டு பிள்ளைகளின் தந்தையாவார் எனத் தெரிவித்த பொலிஸார், சந்தேகநபரை ஹட்டன் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிவித்தனர்.

## மலசலக்கூட கட்டணம்



இலங்கை ரயில் திணைக்களத்துக்கு உரித்துடைய காணியில், இலங்கை போக்குவரத்து சபையின் ஊடாக, பொது மலசலக்கூடங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

மேற்படி விவகாரம் தொடர்பில் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பணிப்பாளர் ஷெரினிடம் வினவியபோது,

“இந்த பொது மலசலக்கூட தொகுதி, எங்களுடைய ஆணைக்குழுவுக்கு உரித்துடையது என்றாலும், வெளியாருடன் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில், பாரமரிப்பதற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. அங்கு அறவிடப்படும் கட்டணங்கள் தொடர்பில் பொதுமக்களால் அவ்வப்போது முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. நாங்கள் விசாரணைகளை முன்னெடுத்து, நடவடிக்கைகளையும் எடுத்துள்ளோம். எனினும், தற்போது கட்டணம் அதிகரிக்கப்பட்டமை தொடர்பில் அறிந்திருக்கவில்லை. இது தொடர்பில் தேடியறிந்து நடவடிக்கை எடுப்பேன்” என்றார்.

## JICA தலைவர்– ஜனாதிபதி சந்தித்துப் பேச்சு



ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கும் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்தின் (JICA) தலைவர் கலாநிதி தனக்கா அகிஹிக்கோவிற்கும் இடையிலான சந்திப்பொன்று ஜனாதிபதி அலுவலகத்தில் புதன்கிழமை (14) இடம்பெற்றது.

புதிய பொருளாதார சீர்திருத்தங்களை மேற்கொள்வது கடினமான செயலாக இருந்தாலும் இலங்கையில் பொருளாதார சீர்திருத்தங்களை அமுல்படுத்துவதற்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் அர்ப்பணிப்பை கலாநிதி தனக்கா அகிஹிக்கோ பாராட்டினார்

கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய விஸ்தரிப்புத் திட்டம், இலகு ரயில் திட்டம் மற்றும் மத்திய அதிவேக நெடுஞ்சாலை உள்ளிட்ட ஜப்பானிய உதவியின் கீழ் இந்நாட்டில் ஆரம்பிக்கப்பட்டு தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ள திட்டங்களை துரிதமாக மீள ஆரம்பிப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இங்கு தெரிவித்தார்.

கடந்த கால பொருளாதார நெருக்கடியின்போது, இலங்கைக்கு வழங்கிய தொடர்ச்சியான ஆதரவிற்காக ஜப்பானிய அரசாங்கம் மற்றும் ஜெய்காவிற்கும் ஜனாதிபதி நன்றி தெரிவித்தார்.

இலங்கையில் கடன் மறுசீரமைப்புப் பணிகள் நிறைவடைந்ததன் பின்னர் தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ள திட்டங்களை மீண்டும் ஆரம்பிக்க ஜெய்கா தயாராக இருப்பதாகக் கலாநிதி அகிஹிட்டோ மேலும் குறிப்பிட்டார்.

தேசியப் பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் சர்வதேச உறவுகள் விவகார பணிப்பாளர் தினுக் கொழம்பகே ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# “3 வீதமான பிள்ளைகள் கல்வியை இழந்துள்ளனர்”

தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் கூறும் பிரகாரம், வங்குரோத்து நிலை நாட்டில் 54 சதவீத பாடசாலை மாணவர்களின் கல்வியில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. பாடசாலை செல்லும் மாணவ மாணவிகளில் 3 சதவீதமானோர் பாடசாலை செல்வதை நிறுத்திவிட்டனர். மேலும் பல மாணவ மாணவிகள் பாடசாலை உபகரணங்களைப் பெற்றுக்கொள்ள முடியாமல் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகியுள்ளனர் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

பிரபஞ்சம் தகவல் தொழில்நுட்ப வேலைத் திட்டத்தின் 98ஆவது கட்டமாக 10 இலட்சம் ரூபாய் பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்கள் இரத்தினபுரி, பெல்படுல்ல விஜயபா மகா வித்தியாலயத்திற்கு வழங்கி வைக்கும் நிகழ்வில் வியாழக்கிழமை (15) கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும், 41 இலட்சம் மாணவச் செல்வங்களின் நலனில் அக்கறை செலுத்த முடியாவிட்டால் கல்வி அமைச்சும் அரசாங்கமும் இருப்பதில் அர்த்தமில்லை. பிள்ளைகளையும் தாய்மார்களையும் பாதுகாத்து குடிமக்களைப் பாதுகாப்பதே அரசாங்கத்தின் முதன்மைப் பணியாக இருக்க வேண்டும். ஆனால், தற்போதைய அரசாங்கம் அதை செய்வதாக இல்லை. பாதிப்புக்குள்ளான சகல தரப்பினரையும் உள்ளடக்கி அவர்களைக் கவனித்துக் கொள்ளும் வகையில் சமூகப் பாதுகாப்பு வலயத்தைத் தயாரித்து, சமூகப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது அரசாங்கத்தின் பொறுப்பாகும். ஆனால் தற்போதைய அரசாங்கத்தில் அவ்வாறான முன்னெடுப்பொன்று நடப்பதாகத் தெரியவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

வங்குரோத்தான நாட்டில் யாரால் பணியாற்ற முடியும் என்பதை மக்களே தீர்மானிக்க வேண்டும். கட்சி வேறுபாடின்றி யாரால் பணியாற்ற முடியும் என்பதை மக்களே கண்டறிய வேண்டும். அதிகாரம் இல்லாமலே மக்களுக்குச் சேவை செய்து வருகின்றவர்கள் யார்? நாடு பூராகவும் சென்று வாய்ப்பேச்சில் வீராப்பு காட்டி வருபவர்கள் யார் என்பதை மக்களே புத்திசாலித்தனமாகச் சிந்தித்துப் பார்க்க வேண்டியுள்ளது என தெரிவித்துள்ளார்.



# இரு கட்சிக்கிடையே ஏற்பட்ட மோதலில் மூவர் கைது



எஸ்.சதீஸ்

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் ஆதரவாளர்கள் மற்றும் தொழிலாளர் தேசிய சங்கத்தின் ஆதரவாளர்கள் இடையில் ஏற்பட்ட மோதலில் மூவர் வைத்தியசாலையில் அனுதிக்கப்பட்டுள்ளதுடன் மூவர் வியாழக்கிழமை (15) கைது செய்யப்பட்டுள்ளதாக பொகவந்தலாவ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

எதிர்வரும் 19ஆம் திகதி பொகவந்தலாவை பகுதியில் அமைக்கப்படவுள்ள இந்திய வீடமைப்பு திட்டத்திற்கு அடிகல் நாட்டும் நிகழ்விற்கு, குறித்த பகுதியில் உள்ள காணியினை சுத்தப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டு கொண்டிருந்தபோதே தொ.தே.சவின் நான்கு ஆதரவாளர்கள் இ.தொ.காவின் ஆதரவாளர்களை தாக்கியுள்ளதாக பொகவந்தலாவை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, முன்னெடுக்கப்படவுள்ள வீடமைப்பு திட்டத்தில் தமக்கு வேண்டப்பட்டவருக்கு வீடுகளை வழங்குவதாக கூறி, இ.தொ.கா. தலைவர் பணம் பெற்றதாக தோட்ட பொதுமக்களால் பொகவந்தலாவை தேயிலை தொழிற்சாலைக்கு முன்பாக ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் பொகவந்தலாவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக தெரிவித்துள்ளனர்.



# காணிக்குள் புகுந்த அரச பேருந்து

நிதர்ஷன் வினோத்


யாழ்ப்பாணம் தென்மராட்சி - A9 வீதி, நாவற்குழி பகுதியில் புதன்கிழமை (14) அரச பேருந்து ஒன்று வீதியை விட்டு விலகி காணிக்குள் புகுந்தது விபத்துக்குள்ளாகியுள்ளது.

A9 வீதியில் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்று வீதியில் திரும்ப முற்பட்டபோது, பின்னால் பயணித்த அரச பேருந்து அதனை முட்டி தள்ளியதோடு, பாதையை விட்டு விலகி காணிக்குள் புகுந்துள்ளது.

இதன்போது, மோட்டார் சைக்கிளுக்கு சேதங்கள் ஏற்பட்டிருந்த போதிலும், பயணித்த இருவருக்கும் காயங்கள் ஏற்படவில்லையெனவும் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் மேற்கொண்டு வருவதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

# “விரைவில் திறக்க வேண்டும்”

பி.கேதீஸ்



பிதுருதலாகல மலைத்தொடரை சுற்றுலாப் பயணிகளுக்காக விரைவில் திறக்க வேண்டும் என மத்திய மாகாண ஆளுநரும் நுவரெலியா மாவட்ட அபிவிருத்திக் குழுவின் இணைத் தலைவருமான சட்டத்தரணி லலித் யு.கமகே தெரிவித்துள்ளார்.

நுவரெலியா மாவட்ட செயலகத்தில் செவ்வாய்க்கிழமை (13) நடைபெற்ற நுவரெலியா மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் வைத்தே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், “பிதுருதலாகல எமது நாட்டில் மிக உயர்ந்த மலை. இம்மலைத்தொடர் சுற்றுலாத்துறைக்கு அதிக வருமானம் ஈட்டிக்கொடுக்கும் என்பதுடன், அதை இனி மூடப்படுவது பொருத்தமல்ல. எனவே அதனை பொதுமக்களுக்கும் சுற்றுலாப் பயணிகளுக்கும் திறக்க விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்”

மேலும் குழுக் கூட்டத்தில், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் நுவரெலியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவருமான எஸ். பி.திஸாநாயக்க, பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ராமேஸ்வரன், வி.இராதாகிருஸ்ணன் ஆகியோர் கலந்துகொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வழுக்கி விழுந்தவர் மரணம்

செ.திவாகரன், டி.சந்ரு

நுவரெலியா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மவுண்ட் மேரி பகுதியில் புதன்கிழமை (15) மண்மேட்டிலிருந்து வழுக்கி விழுந்து நபரொருவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் நுவரெலியா - மவுண்ட் மேரி வீதியை சேர்ந்த 71 வயதுடைய வெள்ளசாமி கருப்பையா என நுவரெலிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவத்தன்று தனது விவசாய தோட்டத்திற்கு சென்று மீண்டும் வீடு திரும்பும்போது, மழையுடன் கூடிய காலநிலையால் சுமார் 530 சென்றிமீட்டர் உயரம் கொண்ட மண்மேட்டில் இருந்து வழுக்கி விழுந்து உயிரிழந்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை நுவரெலியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# மாசி மஹோற்சவம்; விஷேட பாதுகாப்பு ஏற்பாடு

எதிர்வரும் 24ஆம் திகதி நடைபெறவுள்ள மாத்தளை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான மாசி மஹோற்சவத்தின் விஷேட பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பாக ஆராயப்பட்டுள்ளன.

மாத்தளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சருமான பிரமித்த பண்டார தென்னகோனுக்கும் மேற்படி தேவஸ்தான அறங்காவலர் சபை தலைவர் பி.தருவானந்தா தலைமையிலான ஏற்பாடு குழுவினருக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே இந்த விஷேட பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானத்துக்கு விஜயம் செய்த பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் விசேட பூஜை வழிபாடுகளிலும் ஈடுபட்டார். அதனைத் தொடர்ந்து இராஜாங்க அமைச்சருக்கும் தேவஸ்தான அறங்காவலர் சபையினருக்கும் இடையில் கலந்துரையாடல் இடம்பெற்றது.



இம்முறை நடைபெற உள்ள மஹோற்சவத்திற்கு உள்நாட்டு மற்றும் வெளிநாடுகளைச் சேர்ந்த சுமார் 10 இலட்சத்திற்கும் அதிகமான பக்தர்கள் கலந்து கொள்வார்கள் என ஏற்பாட்டுக் குழுவினரால் எதிர்பார்க்கப்படுவதால் எவ்வித தடைகளும் இன்றி பக்தர்கள் பூஜை வழிபாடுகளில் ஈடுபடுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்வது தொடர்பிலும் விசேட பாதுகாப்பு வழங்குவது தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டன. விசேடமாக இராணுவம் பொலிஸ் மற்றும் சிவில் பாதுகாப்புப் படையினர் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.



# “பணத்தை மீளளிக்க தயார்”

## நொதேர்ன் யூனியின் அறிக்கை

யாழில் நடைபெற்ற பிரபல தென்னிந்திய பாடகர் ஹரிஹரனின் இசை நிகழ்வில் சிறு தடங்கல் மற்றும் அசௌகரியம் காரணமாக, நுழைவு சீட்டு மூலம் கிடைக்கப்பெற்ற வருவாய் முழுவதையும் மீளளிப்பதற்கு முடிவு செய்துள்ளதாக நொதேர்ன் யூனியின் (NORTHERN UNI) வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் கடந்த வெள்ளிக்கிழமை (09) நடைபெற்ற இசை நிகழ்ச்சியில், பிரபல பாடகர் ஹரிஹரன், நடிகை தமன்னா மற்றும் தொகுப்பாளினி டிடி, KPY பாலா, பின்னணி பாடகி ஸ்வேதா மோகன், புகழ் உள்ளிட்ட பல பிரபலங்களும் கலந்துகொண்டனர்.

நன்றாக நடைபெற்றுக் கொண்டிருந்த இந்த நிகழ்ச்சிக்கு ஒரு இலட்சத்திற்கும் மேல் ரசிகர்கள் குவிந்துள்ளனர். கட்டுக்கடங்காத கூட்டம் மற்றும் நிகழ்ச்சி ஆரம்பிப்பதற்கு முன்னரே சில விசமிகள் நேர்முகமாகவோ மறைமுகமாகவோ பல தடைகள் காரணமாகத் தடங்கல் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்த நொதேர்ன் யூனியின் (NORTHERN UNI) அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதில், ‘இந்நிகழ்வில் ஏற்பட்ட சிறு தடங்கல் மற்றும் அசௌகரியம் காரணமாக, கிடைக்கப்பெற்ற வருவாய் முழுவதையும் மீளளிப்பதற்கு முடிவு செய்துள்ளோம் என்றும் தங்களால் செலுத்தப்பட்ட பணம் வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள மாணவர்களின் கல்விச் செயற்பாட்டுக்கு பயன்படுத்த எண்ணுவோர் அவ்வாறே விட்டு விட, பணத்தினை மீளப் பெற விரும்புபவர்கள் தரப்பட்டுள்ள தொலைபேசி இலக்கத்தை 077-7315262 தொடர்பு கொள்ளுங்கள்’ என்றும் குறிப்பிடப் பட்டுள்ளது.

# நியமனம் வழங்கி வைப்பு

ஆ.ரமேஸ்.



நுவரெலியா மாவட்டத்தில் ஹங்குராங்கெத்த, வலப்பனை, அம்பகமுவ மற்றும் நுவரெலியா ஆகிய பிரதேச செயலக பிரிவில் இயங்கும் சமுர்த்தி வங்கிகளில் தற்காலிகமாக உதவி முகாமையாளர் பதவிகளை வகித்து வந்த ஏழு பேருக்கு நிரந்தர உதவி முகாமையாளர் நியமனம் மாவட்ட செயலாளர் நந்தன கலபடவினால் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

இந்த நியமனம் வழங்கும் நிகழ்வு மாவட்ட சமுர்த்தி பணியின் அத்தியட்சகர் எஸ்.எம். ரத்ணதாஸ தலைமையில் நுவரெலியா மாவட்ட செயலகத்தில் இயங்கும் சமுர்த்தி திணைக்களத்தில் புதன்கிழமை (14) காலை இடம்பெற்றுள்ளது .

இதன்போது ஹங்குராங்கெத்த பிரதேச செயலக பிரிவு சமுர்த்தி வங்கிக்கு கே.எம். உடுவெல்ல, வலப்பனை பிரதேச செயலக பிரிவு சமுர்த்தி வங்கிக்கு பி.ஜி.ஐ.பாலசூரிய, நுவரெலியா பிரதேச செயலக பிரிவு சமுர்த்தி வங்கிக்கு கே.ஏ.நவநீதராஜா, .யு. எம்.விக்ரமசிங்க, ஆர். எஸ்.நிலந்தி குமாரி ஆகியோருக்கு உதவி வங்கி முகாமையாளர் நியமன கடிதம் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

மேலும் அம்பகமுவ பிரதேச செயலக பிரிவு சமுர்த்தி வங்கிக்கு எஸ். டி.வனிகசேகர, மற்றும் கே.எஸ்.கே.ரணசிங்க ஆகியோர் உதவி வங்கி முகாமையாளர் நியமனம் பெற்று இவர்கள் அனைவருக்குமான நியமன கடிதங்களை மாவட்ட செயலாளர் நந்தன கலபட உத்தியோகபூர்வமாக வழங்கி வைத்துள்ளார்.

# மாற்றுத்திறனாளிகள் கௌரவிப்பு



மட்டக்களப்பில் மாற்றுத்திறனாளிகளை கௌரவிக்கும் நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின் வழிகாட்டுதலின் பேரில், சமூக சேவைகள் அமைச்சு நடத்திய இந்நிகழ்வில், மாற்றுத்திறனாளிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த சுய தொழில் உபகரணங்களும், பொழுதுபோக்குக்காக அவர்களின் வீடுகளுக்கு LED தொலைக்காட்சிகளும் செந்தில் தொண்டமானால் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

அத்துடன், சாதனைகள் நிகழ்த்திய தேர்ந்தெடுக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கு விருதுகளும் வழங்கி வைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# “சீருடை வழங்குவதில் அதிபர்கள் பாரபட்சம்”

எஸ்.சதீஸ்

மலையக பெருந்தோட்ட பாடசாலைகளில் 2023ஆம் ஆண்டு க.பொ.சா.தர பரீட்சைக்குத் தோற்றி உயர்தர வகுப்பிற்கு வேறு பாடசாலைகளுக்குச் செல்லும் மாணவர்களுக்கான சீருடை மற்றும் பாதணிகளுக்கு பாடசாலை அதிபர்கள் விண்ணப்பிப்பதில் பாரபட்சம் காட்டிவருவதாக பெற்றோர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள சுற்று நிருபத்தின்படி, ஒரு பாடசாலையில் மாணவர்களின் பெயர்கள் பதிவு செய்யப்பட்டிருப்பின் அந்த மாணவர்களுக்குக் கல்வி அமைச்சினால் இலவசமாக வழங்கப்படுகின்ற புத்தகங்கள், சீருடைகள் மற்றும் பாதணிகள் என்பன வழங்கப்பட வேண்டுமென்பது கல்வி அமைச்சின் சட்டதிட்டமாகும்.

அந்தவகையில், 2023ஆம் க.பொ.சா.தரப் பரீட்சைக்குத் தோற்றி உயர் தரத்திற்குச் செல்லும் மாணவர்களுக்கு இந்த இலவச சீருடை மற்றும் பாதணிகளுக்கு உரிய பாடசாலையின் அதிபர்கள் விண்ணப்பிக்காமையினால் வெளி பாடசாலைக்குச் செல்லும் மாணவர்கள் பணம் கொடுத்து பாதணிகளையும் சீருடைகளையும் வாங்க வேண்டிய சூழ்நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். நாட்டில் ஏற்பட்டுள்ள வற் வரி அதிகரிப்பு காரணமாக நாளுக்கு நாள் பொருட்களின் விலை அதிகரித்துக் காணப்படுகின்ற நிலையில், அரசாங்கத்தில் இலவசமாக வழங்கப்படுகின்ற இது போன்ற சீருடை பாதணிகளுக்கு அதிபர்கள் விண்ணப்பிக்காமல் இருப்பதற்கு என்ன காரணம் என பெற்றோர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

மேலும், சீருடைகளையும் பாதணிகளையும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பாதிக்கப்பட்ட பெற்றோர்கள் கோரிக்கையும் விடுத்துள்ளனர்.

# அஸ்வெசுமவின் இரண்டாம் கட்ட விண்ணப்பங்கள்

கடும் பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கித் தவிக்கும் சாதாரண மக்கள், தங்களுடைய வாழ்க்கையை ஓரளவுக்கேனும் கொண்டுநடத்தும் வகையில், அரசாங்கத்தால், பல நிதியுதவி திட்டங்கள் வழங்கி வைக்கப்படுகின்றன. அதில், 'அஸ்வெசும' பிரதானமாக தற்போது பேசப்படுகின்றது.

இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட போது, சமுர்த்தி கொடுப்பனவு இல்லாமற் செய்யப்படும். முதியோருக்கான கொடுப்பனவு வழங்கப்படாது.

சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவு இரத்துச் செய்யப்படும் உள்ளிட்ட பல்வேறான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன.

இதற்கிடையே, இது "தேர்தல் குண்டு", தேர்தல்களில் மக்களின் வாக்குகளைப் பெற்றுக்கொள்ளும் வகையில் இந்த 'அஸ்வெசும' ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றும், தேர்தல் நிறைவடைந்ததன் பின்னர், திட்டமே கைவிடப்பட்டு விடும் என்றும் பலரும் கூறினர்.

எனினும், 'அஸ்வெசும' திட்டத்தின் கீழ், பெரும்பாலான மக்கள் பயனடைந்துள்ளனர். தங்களுடைய தேவைகளை ஓரளவுக்கேனும் பூர்த்தி செய்யும் வகையில், கொடுப்பனவுகள் வழங்கப்படுகின்றன. அந்த திட்டத்துக்கான விண்ணப்பம் செய்யாதவர்கள். அநியாயம்,நாமும் விண்ணப்பித்து இருக்கலாம் என்று சிந்திக்கின்றனர்.

இதனிடையே, கட்சி அங்கத்தவர்களை மையமாகக் கொண்டு, இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டதாக, அரசியல் கட்சிகள் குற்றஞ்சாட்டின. எனினும், சகல கட்சிகளைச் சேர்ந்தவர்களும் இதனால் பயனடைந்துள்ளனர்.

இதற்கிடையே, மேலும் 24 இலட்சம் மக்கள் பயனடையும் வகையில், அஸ்வெசும திட்டத்தின் இரண்டாம் கட்டம் பெப்ரவரி 15ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. அதில், பயனடைய விரும்புவோர், மார்ச் 15ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தகுதிபெறும் அனைவருக்கும் எவ்வித தடங்கலும் இன்றி அஸ்வெசும பலன்கள் கிடைக்கும் எனத் தெரிவித்துள்ள நலன்புரி நன்மைகள் சபையின் தலைவர் ஜயந்த விஜேரத்ன, அஸ்வெசும முதற்கட்டத்தில் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்காத குடும்பங்களுக்கும் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தும் வீட்டுத் தகவல் கணக்கெடுப்புக்கு உட்படுத்தப்படாத எந்தவொரு நபர்களும் இரண்டாம் கட்டத்திற்கு விண்ணப்பிக்க வாய்ப்பு இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

முடிந்தவரை உண்மையான மற்றும் துல்லியமான தகவல்களுடன் விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதன் மூலம் நன்மைகளை வழங்கும் செயல்முறையைத் துரிதப்படுத்த முடியும் என்று குறிப்பிட்ட அவர், விண்ணப்பிக்கையில் கட்டாயம் அடையாள அட்டை எண்ணைக் குறிப்பிட வேண்டும் என்றார்.

தேசிய அடையாள அட்டைகள் இல்லாத விண்ணப்பதாரர்களுக்கு உடனடியாக அடையாள அட்டைகளை வழங்கும் விசேட வேலைத்திட்டம், ஆட்பதிவுத் திணைக்களத்தினால் பிரதேச செயலக மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது என்றார்.

அஸ்வெசுமவின் இரண்டாம் கட்டத்திற்கான விண்ணப்பத்தை ஒன்லைன் முறையிலும் கிராம உத்தியோகத்தர் அல்லது பிரதேச செயலகத்தின் ஊடாகவும் பெற்றுக்கொள்ள முடியும் மற்றும் www.wbb.gov.lk என்ற இணையத்தளத்தின் ஊடாக சிங்களம், தமிழ் அல்லது ஆங்கிலத்தில் விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்து விண்ணப்பிப்பதே சிறந்தது.

தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## கறுப்பு யூலையின் நாற்பதாண்டுகளின் பின்–40:

# தேர்தல் கொடுத்த அதிர்ச்சி

**தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ**

1960களில் வடபுலத்தில் சாதியத்திற்கெதிரான போராட்டங்கள் மிகுந்த எழுச்சியுடன் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, தமிழரசுக் கட்சியின் தலைவர்கள் தங்கள் சாதிப்பாசத்தினை தொடர்ச்சியாக வெளிப்படுத்தினர். இது அவர்களது சாதிய நிலைப்பாட்டை வெளிப்படுத்தி நின்றது. இந்நிலையில் 1970இல் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் தமிழரசுக் கட்சியினர் படுதோல்வியடைந்தனர். குறிப்பாக 'தமிழரசுத் தளபதி' என்று புகழப்பட்ட அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் வட்டுக்கோட்டையில் கண்ட தோல்வி வரலாற்று முக்கியத்துவம் மிக்கது. இந்தத் தோல்வி தமிழரசுக் கட்சி தானாகவே உருவாக்கிக் கொண்டதொன்று.

1965இல் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியமைக்கத் தமிழரசுக் கட்சியின் ஆதரவு முக்கியமானது. இதன்மூலம் தமிழருக்கு உரிமைகளை வெல்லலாம் என்று தமிழ்மக்களுக்கு விளக்கம் கொடுக்கப்பட்டது. ஆனால், வெகு விரைவிலேயே இவ்வாட்சியில் எதுவும் வழங்கப்படப் போவதில்லை என்பதை உணர வெகுகாலம் எடுக்கவில்லை. ஆனால் கூட்டணியில் இருந்து விலகவும் தமிழரசுக் கட்சி தயாராக இருக்கவில்லை. 1967 அளவிலேயே இந்த அரசினால் தமிழருக்குப் பலனேதும் இல்லை என்பதைத் தமிழ் மக்கள் புரிந்து கொண்டார்கள். ஆனால், விலகினால் சலுகைகளை இழக்க நேரிடும் என்பதைத் தலைவர்கள் உணர்ந்திருந்தனர். இதனால் அரசாங்கத்தில் தொடர்ந்தும் பங்காளியாக இருந்தனர். 1970இல் பொதுத் தேர்தலை எதிர் நோக்க வேண்டிய நிர்ப்பந்தத்தைத் தமிழரசுக் கட்சி அறிந்திருந்தது. ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூடியிருந்து எதையுமே வென்றெடுக்காத நிலையில், தமிழரசுக் கட்சியால் ஐக்கிய தேசியக் கட்சியின் கூட்டாளியாகத் தேர்தலில் நிற்க முடியாது. இதனால் மேம்போக்காக அரசாங்கத்தை எதிர்ப்பது போல எதையாவது செய்ய வேண்டிய தேவை தமிழரசுக் கட்சிக்கு இருந்தது.

1968 முடிவில் திருகோணமலை-கோணேசர் கோவிற் பகுதியை புனித நகராக்கும் யோசனையை மையமாக வைத்துத் தமிழரசுக் கட்சி செனெற்றரும் உள்ளூராட்சி அமைச்சருமான மு.திருச்செல்வம் தனது அமைச்சர் பதவியிலிருந்து விலகினார். இதன்மூலம் இரண்டு விடயங்களைத் தமிழரசுக் கட்சி செய்தது. முதலாவது அரசில் இருந்து தமிழரசுக் கட்சி விலகிவிட்டது என்ற தோற்றப்பாட்டை மக்கள் மத்தியில் உருவாக்கியது. இரண்டாவது, தமிழரின் உரிமைக்காகப் பதவிகளைத் துறக்கும் கட்சி என்ற பெயரை வாங்கிக் கொண்டது. ஆயினும், 1970 தேர்தல் வரை, அரசாங்கத்திற்குத் தமிழரசுக் கட்சியின் ஆதரவு தொடர்ந்தது. 1970 தேர்தலில் சிறிமா பண்டாரநாயக்க தலைமையிலான ஐக்கிய முன்னணி மூன்றிலிரண்டிற்கும் மேலான பெரும்பான்மையுடன் ஆட்சியை பிடித்தபோது தமிழரசுக் தலைவர் எஸ்.ஜே.வி. செல்வநாயகம் 'தமிழரை இனிமேல் கடவுள் தான் காப்பாற்ற முடியும்' என்று சொன்னார். இதற்கு பல காரணங்கள் இருந்தன.

முதலாவது, யார் அரசாங்கத்தை அமைப்பது எனத் தீர்மானிக்கும் ஆற்றல் தமிழரசுக் கட்சிக்கே உரியது என்று தொடர்ச்சியாகச் சொல்லி வந்த தமிழரசுக் கட்சிக்குத் தேர்தல் முடிவுகள் ஏமாற்றமளித்தன. எனவே, அரசாங்கத்தில் அழுத்தம் செலுத்த இயலாத நிலைக்குத் தமிழரசுக் கட்சி தள்ளப்பட்டது. இரண்டாவது, ஐக்கிய தேசியக் கட்சியோடு மிகவும் நெருக்கமாக இருந்தமையாலும் ஐக்கிய தேசியக் கட்சியோடு தம்மை அடையாளப்படுத்திக் கொண்டமையாலும் புதிய ஆட்சியோடு உறவைப்பேண இயலாத நிலை தமிழரசுக் கட்சிக்கு ஏற்பட்டது. மூன்றாவது, தமிழரசுக் கட்சியின் தலைவர்கள் அடைந்த தோல்விகள் ஏற்படுத்திய அதிர்ச்சியின் விரக்தி.

1965-70 காலகட்டத்தில் தமிழரசுக் கட்சி பாராளுமன்ற அரசியலில் தமிழ் மக்களை ஏய்த்தது பற்றி மக்கள் கோபமும் விரக்தியுமுற்றிருந்தனர். ஏதேட்சதிகார அகம்பாவத்துடன் தமிழரசுத் தலைவர்கள் நடந்து கொண்டார்கள். யாழ்ப்பாணக் குடாநாட்டு நிகழ்வுகளில் தமிழரசுக் கட்சித் தலைமையின் மனோபாவம் அதே விதமாகவே பிரதிபலித்தது. ஆனால் துரதிர்ஷ்டவசமாகத் தமிழரசுக் கட்சிக்கு மாற்றான வலிய தமிழ்த் தேசியக் கட்சி எதுவும் இருக்கவில்லை. இந்நிலையிலும் வட்டுக்கோட்டைத் தொகுதியில் அமிர்தலிங்கமும் உடுப்பிட்டித் தொகுதியில் மு.சிவசிதம்பரமும் தேர்தலில் தோல்வியைச் சந்தித்ததற்கான காரணங்களில் அவர்கள் மீது வட பகுதி மக்கள், குறிப்பாக அவர்களது தொகுதி மக்கள், கொண்டிருந்த கோபம் முக்கியமானது. வட்டுக்கோட்டைத் தொகுதியில் அமிர்தலிங்கத்துக்குக் கிடைத்த அதிர்ச்சியானது அதிகாரத்திமிருக்கு மக்கள் கொடுத்த பலமான அடியாகும்.

அமிர்தலிங்கத்தின் தோல்வியின் முக்கியத்துவம் அவர் சார்ந்து கட்டியெழுப்பப்பட்ட பிம்பத்தைச் சிதைத்தது. 1956 முதல் 1961 சத்தியாகிரகம் வரை சிலரால் அமிர்தலிங்கம் பற்றி மக்கள் மத்தியில் கட்டியெழுப்பப்பட்ட படிமம் இந்தியாவின் காந்திக்கு நேரு போல ஈழத்தின் காந்தி எனப்பட்ட செல்வநாயகத்திற்கு அமிர்தலிங்கம் என்ற வகையிலானது. ஆமிர்தலிங்கம் நல்ல மேடைப்பேச்சாளராகவும் இளைஞர்களின் ஆதரவைப் பெற்றவராகவும் இருந்தார். எனவே அவர் தோற்கடிக்க முடியாதவர் என்ற பிம்பம் இருந்தது.

இதே காலப்பகுதியில் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்புப் பாராளுமன்ற உறுப்பினரான ராஜதுரை அமிர்தலிங்கத்தின் நேரடிப் போட்டியாளரானார். ராஜதுரையை ஓரங்கட்ட அமிர்தலிங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகள் பலரை முகஞ்சுளிக்க வைத்தன. பிரதேசவாசத்தைக் தனக்கு வாய்ப்பாக முதன்முதலில் கையில் எடுத்தவர் அமிர்தலிங்கம். அமிர்தலிங்கத்தால் கட்டுப்படுத்த முடியாதளவுக்கு இராஜதுரை கிழக்கு மாகாணத்தில் தனக்கென்று ஒரு தளத்தை அமைத்துக் கொண்டார்.

கிழக்கில் சிங்களப் பேரினவாதத்துக்கு எதிரான உணர்வுகள் எழுச்சி பெற்ற நிலையிலும் யாழ்ப்பாண வேளாள மேட்டுக்குடியினருக்கு கிழக்கில் வலுவான தலைவர்கள் உருவாகுவமை அனுமதிக்க இயலவில்லை. ஒப்புக்காக ராஜவரோதயம், ராசமாணிக்கம் போன்றோரைத் தலைமைப் பொறுப்புக்களில் அமர்த்தினாலும் உண்மையான அதிகாரம் வேறெங்கோ இருந்தது என்ற உண்மை வெளிப்படையானது.

1970 தேர்தலில் தமிழரசுக் கட்சியின் வாக்கு வங்கி கணிசமாகக் குறைந்தது. இதற்கு மூன்று காரணங்கள் முக்கியமானவை. முதலாவது, 1965-70 காலப்பகுதியில் தமிழரசுக் கட்சியினரின் திமிர்த்தனமான நடத்தையும் சத்தியாகிரகத்தின் தோல்வி, முத்திரை வெளியீடு போன்றன ஏற்படுத்திய நம்பிக்கையீனமும். தமிழரசுக் கட்சியினர் மக்களை உணர்ச்சியூட்டி தம் நலன்களைப் பேணுகிறார்கள் என்ற எண்ணம் வலுக்கத் தொடங்கியது. இக்காலப்பகுதியில் மக்களின் நம்பிக்கையைத் தமிழரசுக் கட்சி இழக்கத் தொடங்கி விட்டது.

இரண்டாவது சாதியத்திற்கு எதிரான போராட்டங்களில் தமிழரசுக் கட்சியினரின் நிலைப்பாடு. சாதியத்துக்கெதிரான போராட்டங்கள் நிகழ்ந்தபோது ஒடுக்கப்பட்ட மக்களுக்கு எதிரான நிலைப்பாட்டைத் தமிழரசுக் கட்சி எடுத்தது. குறிப்பான கோவில் நுழைவுப் போராட்டத்தை வன்மையாகக் கண்டித்தது. அரசாங்கத்தில் அங்கம் வகித்த காரணத்தால் பொலிஸாரின் உதவியுடன் இந்த எழுச்சியைத் தடுக்க தம்மாலான அனைத்தையும் தமிழரசுத் தலைவர்கள் செய்தார்கள்.

சாதியத்திற்கு எதிரான போராட்டத்தில் சாதித் திமிர் பிடித்தோரை மகிழ்விக்கும் நிலைப்பாட்டை எடுத்தவர்களில் அமிர்தலிங்கமும் சிவசிதம்பரமும் முக்கியமானோர். இருவரும் தமது தொகுதிகளில் கணிசமான அளவில் வாழும் தாழ்த்தப்பட்ட சமூகத்தினரது ஆதரவில் அது வரை தேர்தல்களை வென்றவர்கள். சாதியம் தொடர்பான இவ்விருவரின் திமிர்த்தனத்திற்கு மக்கள் கொடுத்த பரிசே 1970 தேர்தல் முடிவுகள். இந்த அடியின் வீரியம் யாதெனில், 1977 தேர்தலில் இவ்விருவரும் வேறு தொகுதிகளைத் தேடிப்போக வேண்டியதாயிற்று.

மூன்றாவது, அக்காலத்தில் தொழிற்சங்கப் பிணக்குகள் பலவும் தொழில் வழக்காடு மன்றங்கட்கு முன் வந்தன. யாழ்ப்பாணத்தில் இருந்த பல்வேறு சிறு கைத்தொழில் நிறுவனங்களில் தொழிலாளர்கள் கடுமையாகச் சுரண்டப்பட்டனர். ஆனால் தொழிலாளர்கள் தொழிற்சங்கங்களில் உறுப்பினராக இருந்தமையால் சட்ட உதவியை நாட முடிந்தது.

1956இல் பண்டாரநாயக்க அதிகாரத்திற்கு வந்தபின்பு இத்தகைய சிறு நிறுவனங்களில் தொழிற் சங்கங்கள் அமைப்பதற்கான சட்ட வசதி ஏற்பட்டது. மிகுந்த நெருக்கடிகளின் நடுவே கட்டி எழுப்பப்பட்ட இத்தொழிற்சங்கங்களைச் சாதியத் திமிரில் ஊறி வளர்ந்த யாழ்ப்பாணத்து முதலாளிகளால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இதனால் நியாயமான கோரிக்கைகளுக்கும் வழக்குரைக்க நேர்ந்தது. இவ்வழக்குகளில் தொழிலாளர் சார்பில் நா.சண்முகதாசன் வாதாடினார். முதலாளிகள் சார்பில் தமிழரசுக் கட்சித் தலைவர்கள் வாதாடினர்.

இவர்களில் பிரதானமானவர் மு.ஆலாலசுந்தரம். இவரே பின்னர் கூட்டுறவுச் சங்கப் பண விடயங்களில் ஒழுங்காக நடக்கவில்லை என்பது காரணமாகத் தமிழீழ விடுதலை இயக்கங்கள் சிலவற்றால் கடுமையாக எச்சரிக்கப்பட்ட பின்பு கொல்லப்பட்டவர்.

1970இல் தமிழரசுக் கட்சி தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சி அல்ல என்பதை வாக்குகளின் வழி மக்கள் உணர்த்தினார்கள். ஆனால் தமிழர்களுக்கான உரிமைக் கோரிக்கையை மறுத்த அரசாங்கங்கள் தமிழரசுக் கட்சியை ஒரு அரங்காடியாகத் தக்கவைத்தன.

1970 தேர்தலில் தமிழரசுக் கட்சிக்குக் கிடைத்த அதிர்ச்சித் தோல்வி, கட்சியைத் தீவிரவாதப் போக்குக்கு நகர்த்தியது. இறுதியில் இதன் தலைவர்களே அதற்குப் பலியானார்கள்.



## வாழ்வியல் தரிசனம்

கனவு நிலை அழிந்து போய்விடும். நனவு நிலையே இயற்கையான உண்மை நிலை. கனவுகளில் மட்டும் வாழ முடியாது.

பல அறிஞர்கள் தங்கள் எண்ணங்களை நிஜமாக்கினார்கள். அவை அவர்களின் அறிவினாலும் தொடர் முயற்சியாலும் நிறைவேறின. ஆனால் எந்த முயற்சியையும் செய்யாது, கனவுகளை மட்டும் நம்பி வாழ்பவர்களை என்ன செய்வது?

நிழல் எப்படி நிஜமாகும்? எங்களின் நிழல்கூட சிறிது அசைந்தால் மாறிவிடுகின்றது. இருட்டில் ஏது நிழல்? ஒவ்வொரு நாளும் பற்பல கனவுகள், போகாத இடங்களில் பயணம் செய்து சுற்றித் திரிகின்றது.

உண்மையில் மனிதன் வாழவேண்டும். இடையிடையே தோன்றி, மறையும் காட்சிகளில் மயங்கக்கூடாது. இதுவும் ஒரு மாயநிலை.

தேவையற்ற நினைவுகளைத் தூக்கித் தூக்கி எறிக. அதிகமாக ஆசைப்படக் கூடாது. உங்களை நீங்கள் நம்பாமல் எதுமே முழுமையாகாது. நிஜவாழ்க்கையில் புகுவதே சுலபமான முன்னேற்றம்.

நன்றி -பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### மலை பாம்புகளால் அச்சம்



ஹட்டன்-வட்டவளை தியகல பகுதியின் அடர்ந்த காட்டுப்பகுதிகளில் கூடுதலான மலை பாம்புகள் காணப்படுவதாகவும் இதனால் அச்சமடைவதாகம் மக்கள் தெரிவிக்கின்றனர்.


குறிப்பாக விறகு சேகரிப்பதற்காக செல்வோரும், காட்டுப்பகுதியில் உள்ள பைனஸ் மரகாட்டுக்குள் பால் சேகரிப்பதற்கு செல்வோரும் மிக அச்சத்துடன் குறித்த பகுதிகளுக்கு செல்வதாகவும் குறிப்பிடுகின்றனர்.

மேலும், அப்பகுதியில் காணப்படும் பாம்புகள் வீட்டிற்குள் புகும் அபாயம் காணப்படுவதாகவும், இது குறித்து வனவல திணைக்கள அதிகாரிகள் உடனடியாக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள்ள கோரிக்கை விடுக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இரா.யோகேசன்

உள்ளூர் தரையோடுகள் மற்றும் குளியலறை உபகரண உற்பத்தியாளர்கள்

# வணிகச் சூழலை சமநிலைப்படுத்துமாறு கோரல்



2024 எனும் ஒரு புதிய ஆண்டின் விடியலில், எமது உள்ளூர் தொழில்துறைகளைக் கொண்டாடவும் அவற்றிற்குப் புத்துயிர் அளிக்கவும் எமது உலகளாவிய இருப்பை உயர்த்துவதற்குமான தனித்துவமான வாய்ப்பு உதயமாயுள்ளது. எவ்வாறாயினும், எமது உள்ளூர் உற்பத்தித்துறையை அச்சுறுத்தும் பிரச்சினைக்குரிய சமநிலையற்ற தன்மைக் கண்ணுக்குப் புலப்படாத வகையில் புதைந்துள்ளது.

இந்த சூழ்நிலையைக் கற்பனை செய்து பாருங்கள் உள்ளூர் தரையோடு இறக்குமதியாளர்கள் தங்களால் இறக்குமதி செய்யப்பட்ட தரையோடுகளை ஒரு சதுர மீற்றரிற்கு USD 2.50 என்ற விலையில் மதிப்பிடுகின்றனர். இது தரையோட்டிற்கான செலவு மற்றும் கொழும்புக்கான freight கட்டணம் ஆகிய இரண்டையும் உள்ளடக்கியதாகக் கூறப்படுகிறது. இத்தகைய குறை மதிப்பீடு இறக்குமதியாளர்களுக்கு நியாயமற்ற விலை நிர்ணய நன்மையை வழங்குகிறது. இது எங்கள் உள்ளூர் உற்பத்தியாளர்களுக்குப் போட்டியிடச் சவாலான சூழலை உருவாக்குகின்றது. இலங்கையில் உள்ள சுமார் 400 தரையோடு இறக்குமதியாளர்களில் 80%இற்கும் அதிகமானவர்கள் VAT பதிவின்றி இயங்குகின்றனர். இது ஒரு சீரற்ற வணிகச் சூழலை ஏற்படுத்துவதுடன் எங்கள் சந்தையின் நேர்மையை குறை மதிப்பிற்கு உட்படுத்துகிறது.

இலங்கையின் சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கு உள்ளூர் தரையோடுகள் மற்றும் குளியலறை உபகாரண உற்பத்தித்துறை மிகவும் முக்கியமானது. உதாரணமாக, பட்டியலிடப்பட்ட நிறுவனங்கள் மாத்திரமே 50,000 பங்குதாரர்களை ஆதரிக்கின்ற அதேவேளை, கூட்டாக உள்ளூர் தொழில்துறையில் 5,000 தனிநபர்களுக்குத் தொழில் வழங்குவதுடன் 2,438 விநியோகத்தர்களுடன் இணைந்து, 2022/2023 நிதியாண்டில் 16.7 பில்லியனை வரியாக வழங்கியுள்ளனர்.

உள்ளூர் தரையோடுகள் மற்றும் குளியலறை உபகரண முன்முயற்சியின் (LTBI- Local Tile & Bathware Initiative) ஊடாக உடனடி கவனம் செலுத்துமாறு நாங்கள் வேண்டுகோள் விடுக்கிறோம். உள்ளூர் உற்பத்தியாளர்கள் குறிப்பிடத்தக்கப் பாதக நிலைகளுக்கு மத்தியில் சவாலை எதிர்கொள்ளும் அதேவேளை, எங்கள் சர்வதேச போட்டியாளர்கள் பல தசாப்தங்களாக பாதுகாப்பு வாதம் மற்றும் அரசாங்க ஆதரவிலிருந்து பயனடைந்துள்ளனர்.

உள்ளூர் உற்பத்தியாளர்கள் தங்கள் சிறந்த தரத்திலான தயாரிப்புகள் பற்றிப் பெருமையடைகிறார்கள். இறக்குமதி செய்யப்பட்ட தரையோடுகள் பெரும்பாலும் போதுமான தரச் சோதனைகளுக்கு உட்படுத்தப்படுவதில்லை. அதேவேளை உள்ளூர் தரையோடுகள் அனைத்து 15 அத்தியாவசிய வரைகூறுகளிற்காக இலங்கை கட்டளைகள் திணைக்களத்தின் (SLSI) கடுமையான சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன. எண்ணற்ற கொள்கலன்களை மதிப்பிடுவதில் SLSI எதிர்நோக்குகின்ற சவாலே தர உத்தரவாதத்தில் இந்த முற்றிலும் மாறுபட்ட தன்மைக்கு வழிகோலுகின்றது. இதன் விளைவாக சராசரியிலும் குறைந்த இறக்குமதி செய்யப்பட்ட தரையோடுகள் அவற்றின் பொலிவை விரைவாக இழப்பதோடு அதிருப்திக்கு வழிவகுக்கின்றன.

இறக்குமதி செய்யப்பட்ட தரையோடு தொழில்துறையின் தாக்கத்தை ஆராயும்போது, குவித்தல் (Dumping) அல்லது குறைத்து மதிப்பிடுதல் போன்ற ஒரு தெளிவான போக்கு வெளிப்படுகிறது. 2015 முதல் 2022 வரையான சுங்கப் பதிவுகள், சீனா மற்றும் இந்தியாவிலிருந்து வரும் தரையோடுகளுக்கான சதுர மீற்றரிற்கான விலை நிலையாக குறைந்து வருவதைக் காட்டுகின்றன. உதாரணமாக, 2015/2016இல் ஒரு சதுர மீற்றரிற்கு USS 4.45 என்ற விலையில் இருந்த சீனத் தரை தரையோடுகள், 2020/2021இல் ஒரு சதுர மீற்றரிற்கு USS 3.44 ஆகக் குறைந்துள்ளது. இதேபோல் குளியலறை உபகரணங்களின் அறிவிக்கப்பட்ட மதிப்புகள் 2017/2018 முதல் 2021/22 வரை மாறாமல் உள்ளது. இவ்வாறான போக்கு மற்ற இறக்குமதிகளில் காணப்படாத நிலையில் இதன் சாத்தியப்பாட்டை கேள்விக்குள்ளாகின்றது. நீண்டகால ஆதாயங்களுக்காக குறுகிய கால இழப்புக்களை ஏற்றுக்கொண்டு, உள்ளூர் தொழில்துறையை பலவீனப்படுத்தும் நோக்கில் இந்த நடவடிக்கைகள் உள்ளதா என்ற கேள்வியை இது எழுப்புகிறது.

தனித்துவ சந்தைக்கு மட்டுப்படுத்தப்பட்ட போதிலும், இலங்கை உற்பத்தியாளர்கள் தொடர்ச்சியாகச் சர்வதேச ரீதியாகப் பாராட்டப்பட்ட, SLS தரநிலை தரையோடுகளை எமது உள்ளூர் நுகர்வோருக்கு வழங்குகின்றனர். தரத்திற்கான இந்த அர்ப்பணிப்பு உள்நாட்டு நுகர்வோர் மத்தியில் இலங்கையில் தயாரிக்கப்பட்ட தரையோடுகளுக்கான வலுவான விருப்பத்தை ஊக்குவித்துள்ளது.

இது ஏற்றுமதிக்கு அதிக விலை கோரக்கூடிய, உயர் மதிப்பு சந்தைகள் கொண்ட அமெரிக்கா மற்றும் அவுஸ்திரேலியா போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய உற்பத்தியாளர்களுக்கு வழிசமைத்துள்ளது.

உள்ளூர் உற்பத்தியாளர்கள் மற்றும் அவர்களின் விநியோகச் சங்கிலிகள் புதிய ஆண்டில் அதிக வரிவிதிப்புடன் போராடும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளன. எனவே, நியாயமான மற்றும் சமநிலையான வணிகச் சூழலை நிறுவுவதற்கு ஆதரவளிக்குமாறு நாங்கள் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். இத்தகைய சூழல் நியாயமான போட்டியை வளர்த்து, புதுமைகளைத் தூண்டி, உள்ளூர் உற்பத்தித்துறையில் புதிதாக நுழைபவர்களை ஊக்குவிக்கும் அதேவேளை, வேலை வாய்ப்புக்களை உருவாக்கி, உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கு செலவுக் குறைப்பு வழிமுறைகளில் முதலீடு செய்ய வழிவகுத்து சர்வதேச போட்டித்தன்மையை அதிகரிக்கும்.

இலங்கை உற்பத்தியாளர்கள் 85% ஆன உள்ளூர் மூலப்பொருட்களைப் பயன்படுத்தி தரையோடு உற்பத்தியில் இலங்கையை தன்னிறைவு அடையச் செய்வதில் முதலிட்டுள்ளனர். இதனால் ஏற்பட்டுள்ள குறிப்பிடத்தக்க விலை குறைப்பால்; உள்ளூர் வாடிக்கையாளர்கள் பயனடைகின்றனர். மேலும், செலவுகளைக் குறைக்கும் நோக்கில் சக்தி சேமிப்பு தொழில்நுட்பங்களில் முதலீடுகள் இடம்பெற்றுவருகின்றன.

இலங்கை தன்னால் இயன்றதை உள்நாட்டில் உற்பத்தி செய்து, இயலாததை மாத்திரம் இறக்குமதி செய்ய வேண்டும். இறக்குமதி செய்யப்பட்ட தரையோடு தொழில்துறையின் செயற்பாடுகளை உன்னிப்பாக ஆராயும்போது, குவித்தல் அல்லது குறைத்து மதிப்பிடல் போக்கு வெளிப்படையாகத் தெரிகிறது.

வரலாற்று ரீதியாக, உள்ளூர் வணிகங்களுக்கு சமநிலைப்பாட்டை உறுதி செய்யும் வணிகச் சூழலை உருவாக்கும் சட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் இலங்கை தாமதம் காட்டியுள்ளது. இருப்பினும், எமது இருப்புக்கள் வெறும் 3.5 பில்லியன் அமெரிக்க டொலர்களாகக் குறைந்துவிட்ட நிலையில் உடனடி பயன்பாட்டிற்கு 2 பில்லியன் அமெரிக்க டொலர்கள் மட்டுமே கிடைக்கின்றன. பொருளாதார சூழல் மிகவும் மோசமாக உள்ள நிலையில் தரையோடுகள் போன்ற அடிப்படை பொருட்களுக்கான உள்நாட்டுச் சந்தைகளை உருவாக்கி உள்ளூர் உற்பத்தியாளர்களின் முயற்சிகளை ஆதரிப்பதன் மூலம் உணவு மற்றும் மருந்து போன்ற முக்கிய தேவைகளுக்காக விலைமதிப்பற்ற டொலர்களை சேமிக்கலாம்.

உள்ளூர் தொழில்துறைகளுக்கு அரசாங்க ஆதரவு தேவைப்படுகிறது. ஏனெனில், அவை நமது மூலப்பொருட்களின் மதிப்பை வளப்படுத்தி, சிறிய மற்றும் நடுத்தர அளவிலான சுரங்கத் தொழிலாளர்கள், உள்ளூர் பல்கலைக்கழக பட்டதாரிகள், ஆராய்ச்சிகள் மற்றும் ஒட்டுமொத்த வளர்ச்சி புள்ளிவிவரங்களின் சாதக நிலைக்குப் பங்களிக்கின்றன.

உள்ளூர் தொழில்களை ஆதரிப்பது நமது பொருளாதாரத்தை முன்னேற்றுவது மட்டுமல்லாமல், தரம் மற்றும் விலை நிர்ணயம் ஆகிய இரண்டிலும் நியாயமான சமநிலையை உறுதி செய்கிறது. 1993/94 ஆண்டுகளில் இந்தியா அதன் உள்ளூர் தரையோடு தொழில்துறைக்கு ஆதரவளிக்கும் முகமாகச் சீனத் தரையோடுகள் தங்கள் சந்தையில் குவிக்கப்படுவதற்கு எதிராகச் சட்டங்களைச் செயற்படுத்தி முன்முயற்சி நடவடிக்கைகளை எடுத்தது. மூன்று தசாப்தங்களின் பின்னர் இந்தியாவின் உற்பத்தித் திறன் குறிப்பிடத்தக்க அளவு வளர்ந்துள்ளது. சந்தை சமநிலையைப் பேணும் முகமாகச் செழிப்பு, தரம் மற்றும் நியாயமான விலையை உறுதி செய்து உள்ளூர் உற்பத்தியாளர்களை ஊக்குவிப்பதன் முக்கியத்துவத்தை இது அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. உள்ளூர் உற்பத்தியாளர்களைப் புறக்கணிப்பது இறக்குமதியாளர்களுக்குத் தனியுரிமையை வழங்குவதோடு பொருட்களின் தரம் மற்றும் விலை நிர்ணயம் ஆகிய இரண்டையும் பாதிக்கும்.

வளமான உள்ளூர் சந்தையுடன் இலங்கையின் தரையோடுகள் ஏற்றுமதி சந்தைக்குள் நுழைந்து தற்போதைய குறை மதிப்பிற்கு உட்பட்ட இறக்குமதி விலையை விட மூன்று மடங்கு விலையை நிர்ணயிக்கின்றன. தரையோடு உற்பத்தியாளர்கள் இந்தோ-பசிபிக் மற்றும் வளைகுடா பகுதிகளில் தங்கள் தயாரிப்புக்களைச் சந்தைப்படுத்தவும் விற்கவும் அலுவலகங்களை நிறுவி வருகின்றனர். இந்த வளர்ச்சியை நிலையானதாகவும் சமனானதாகவும் மாற்ற உள்ளூர் மற்றும் வெளிநாட்டு உற்பத்தியாளர்கள் ஒத்த வணிகச் சூழலில் செயற்படுவதை உறுதிசெய்ய வேண்டும்.

இலங்கைக்கான ஒரு புதிய சகாப்தத்தில் நிற்கும் இவ்வேளையில் எமது உள்ளூர் கைத்தொழில்களின் திறனை அங்கீகரித்து அரவணைப்போம். அனைவருக்கும் வளர்ச்சி, புத்தாக்கம் மற்றும் செழிப்பைத் தரும் பாதையை உருவாக்குவோம். நியாயம், வெளிப்படைத்தன்மை மற்றும் பொருளாதார முன்னேற்றம் நிலவும் சிறந்த எதிர்காலத்தை நோக்கி இலங்கையைக் கட்டியெழுப்ப ஒன்றிணைந்து எமது உள்ளூர் தரையோடுகள் மற்றும் குளியலறை உபகரண உற்பத்தியாளர்களுக்கு ஆதரவளிப்போம்.

இவ்வாறு உள்ளூர் தரையோடுகள் உற்பத்தியாளர் சங்கத்தினால் வெளியிடப்பட்டிருந்த ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.




## தமிழ் எங்கள் மூச்சு

அமிழ்தினும் இனியதாம்
எங்கள் தமிழ்...
உமிழ் நீரிலும் தித்திக்கும் தமிழ்
உதிரத்தில் உறைந்திட்ட
உன்னத தமிழ்...
நதிபோல உலகெங்கும்
பரந்திட்ட தமிழ்
தேசம் முழுக்க உலாவரும் தமிழ்
வீசும் காற்றிலும்
தவழ்ந்திடும் தமிழ்...
முச்சங்கங்கள் வளர்த்த
மூத்த தமிழ்
எச்சங்கள் கொண்டு
நிலைத்த தமிழ்...
தேனாய் இனித்திடும் செந்தமிழ்
கானமாய் செவிகளுக்கு
விருந்தளிக்கும் தமிழ்
பேச்சிலே தித்திக்கும்
எங்கள் தமிழ்...
மூச்சிலே கலந்திட்ட எங்கள்
முத்தமிழே நீவாழி...

-சம்பூரணி
சுஜந்தினி யுவராஜா





Mana Neyestani
Iran

## நியாயப்படுத்தும் வன்முறை

உரிமையின் பெயரால்
உறவின்,நட்பின் பெயரால்
மதத்தின், இனத்தின் பெயரால்
சாதியின் பெயரால்
தமக்கே உரித்தான
அரசியலின் பெயரால்
வலிமையுடையஒருசாரார்
எளியோரைக் காயப்படுத்திய வண்ணமே
தம் இருப்பை உறுதிசெய்வர்
அவ்வப்போது
தம்மை நியாயப்படுத்தி
நியாயப்படுத்தி...
வலிகளை உணராதோரின்
நியாயப்படுத்தும் வன்முறை
எல்லாக் குற்றங்களை விடவும்
மிகக் கொடூரமானது
துயரமானது
பாரமானது இப்பூமிக்கு.

- அஷ்ரபாநூர்தீன்





## பிச்சை சம்பளம்

உள்ளாடைகளை
ஒதுக்கித்தள்ளிய
உடைந்த உடல்கள்
தபால் நிலையத்தை
மாதம் ஒருமுறை தரிசிக்க
செல்கையில்
பேரப்பிள்ளைகளின்
விருந்து பட்டியல்களை
சுமந்து செல்வதை
தவறவிடுவதில்லை.

கை நாட்டு இட்டும்
கையெழுத்து போட்டும்
வாங்கிய பிச்சை சம்பளம்
எவ்வளவு பெறுமதி வாய்ந்தது
என்பதை
ஊர் கடைகளில் சேமிக்கையில்
சின்னம் சிறுசுகளின்
உதடுகள் பூத்தமிட்டாய்
பாட்டில்களில்
கை நாட்டுமையின் எச்சங்கள்.

ஊருராய் திறந்து இருக்கும்
தாபால் நிலையங்களை
திருவிழாவாகி
கொண்டாடி மகிழ்வதும்
மகிழ்விப்பதும்
பேரப்பிள்ளைகளின்
வரம்தான்.

எந்த ஊரிலும்
இருக்க கூடாது என
இந்த சொற் கூட்டங்களுடன்
அரசையும்
அரசசார்பற்ற நிறுவனங்களையும்
கேட்பது ஒன்றே ஒன்று.

தபால் நிலையங்களுக்கு
அருகில்
முதியோர் இல்லங்களுக்கு
தப்பித் தவறக்கூட
அனுமதி அளிக்கவேண்டாம்.

- காரையன் கதன்



## மசுக்குட்டி(மயிர்கொட்டி)

புழக்கடைக்குள் நின்றவொரு
பூவரசை மரத்திலின்று
வளைக்கு ரெண்டு கம்புவெட்ட
வளம்பார்த்து மேலேற
சுணைக்கக் கைகால்கள்
சுற்றிநான் பார்க்கையிலே
மழைக்குள் விளைகின்ற
மசுக்குட்டி புழுதானங்கு...

மசுக்குட்டிப் புழுவென்றால்
மரத்திலே வைத்ததனை
பொசுக்கி விடுவதென்றால்
பொல்லாதோர் ஆசைதான்...

பூக்கம் பாளைகுள்ளே
பன்னாடை புகுத்திவைத்து
ஆக்கும் பந்தமொன்றால்
அத்தனையும் அழித்திடலாம்...

ஓலைக் கூந்தலை
ஒன்றாக இறுக்கிக்கட்டி
ஒருபக்கத் தலப்பில்
ஒள்ளுப்பம் நெருப்புவைக்க
ஓங்கியெழும்பும் ஒளிச் சுவாலையை
ஒருபக்கம் பிடிக்க
தாங்கமுடியாமல் தலைகீழாய் விழும்...

மசுக்குட்டி பட்டால்
மளமளன்று தடித்தெழும்பி
கடிக்கும் உடம்பெல்லாம்
காயமும்வரும் சொறிய

அடுப்புச் சாம்பலிலே
அள்ளிப் பூசிவிட்டால்
தடித்த இடமெல்லாம்
கடிப்புக் குறைந்துவிடும்...

மசுக்குட்டிக்கு இப்போ
ஏற மரமேதும் இல்லை
மதிலிலே ஏறியேறி
மயிரொன்றும் இல்லை
பயிரொன்றிலும் இப்போ
மசுக் குட்டியில்லை
பற்றவைத்த பாவமெம்மைச்
சும்மா விடுவதுமில்லை...

- நீலையூர் சுதா



இளம் வயது பெண்களை அதிகம் பாதிக்கும்

# ‘முகப்பரு’



பாதுகாப்பு பெற சில வழிகள்



பைஷல் இஸ்மாயில்



இளம் வயதினரை அதிகம் பாதிக்கக்கூடிய ஒரு நோய் முகப்பருவாகும். இது பெண்களுக்கு அதிகம் ஏற்படும். பெரும்பாலும் விடலை பருவத்தை அடைகின்றவர்களுக்கு இது ஏற்படுகிறது. இதனைப் போக்க எண்ணற்ற முக கிரீம்களும், மருந்துகளும் இன்று அதிக விளம்பரத்துடன் வெளிவருகின்றன. ஆனால், அவற்றை வாங்கி இவர்கள் பயன்படுத்தும் முன், எதனால் இது ஏற்படுகிறது என்ற காரணத்தைத் தெரிந்து கொள்வது நல்லது. இவை தொடர்பில், வைத்தியர் முத்து செல்வகுமாரிடம் MD (Gen.Medi) கலந்துரையாடிய போது அவர் பகிர்ந்து கொண்டவற்றில் சில...

## முகப்பரு எப்படி ஏற்படும்?

தோலில், அதன் மேற்பரப்பு ஈரப்பசையுடன் இருக்க ‘சர்ம மெழுகு சுரப்பிகள்” உள்ளன.

இவை ‘சர்ம மெழுகை உற்பத்தி செய்யும். இதில் பல்வேறு கொழுப்பு அமிலங்களும் அடங்கி இருக்கும். இவை தோலை மிருதுவாகவும், பசையுடனும் இருக்க உதவுகின்றன. சாதாரணமாக இது சுரக்குமளவு அதிகரித்தாலும், தோல் துளை மூடிக்கொண்டு விட்டாலும் ‘முகப்பரு’ எளிதில் ஏற்பட்டுவிடும். ‘முடி’ உள்ள இடங்களில் இது போன்ற நிலை ஏற்படுவதில்லை.

## எங்கெல்லாம் தோன்றும்?

பெரும்பாலும் இது முகத்தில் தோன்றும். என்றாலும் கழுத்து. நெஞ்சின் முன்பகுதி. தோள்பட்டை பகுதி, பின்புறம் ஆகிய

இடங்களிலும் இது ஏற்படலாம். சிலருக்கு இது தொடையிலும் குதப்பகுதியிலும் தோன்றும்.

## தோலில் தோன்றும் மாற்றங்கள்

முதலில் இந்தப் பருக்கள் தொடங்கும்போது அவை சிறிய வெண்ணிறமான முகடு கொண்ட பருக்களாகத் தோன்றும். இதில் சர்ம மெழுகும், தோலடி செல்களும், செதில்களும் கலந்திருக்கும். இவை தோலின் துளையை அடைத்து தோலுக்கு வெளியே சிறிதாக நீட்டிக் கொண்டிருக்கும். அதன் பிறகு, வெண்ணிற முகடு கொண்ட பருக்களிலுள்ள “சல்பர்’ என்ற பொருள் ‘சல்பைட்டு’ என்ற பொருளாக மாறிவிடும்.

இந்த நிலையில் இவற்றைப் பிதுக்கி வெளியேற்றினால் இவை வெளியே வரும். அதன் உட்பகுதியில் மஞ்சள் நிறமான வெண்ணெய் வெளிப்படும். இவற்றை விட்டு விட்டால் நீண்ட காலமாக இவை எவ்வித மாற்றமும் இல்லாமல் இருக்கும். இந்த பருக்களைச் சுற்றி ‘செந்தடிப்புத் தோன்றும்.

பிறகு அந்த இடத்தில் சிறிய வட்ட வடிவ கொப்பளங்கள் தோன்றும் வெண்ணிற பருக்களின் முகடுகள் ‘ரோஜா’ சிவப்பாக மாறலாம்.


இவை பிற நுண்கிருமிகளின் பாதிப்பினால், பழுத்து, ‘சீழ்’ ஏற்படலாம். உட்பகுதியிலுள்ள சீழ் கட்டியாகி, அவை தோலில் குடிப்பான கட்டிகளாகவும், கொப்பளங்களாகவும் தோன்றலாம். சில பகுதிகள் கன்னிப்போய் தோலையும் பாதிக்கும். குறிப்பாக இவற்றை கிள்ளி எடுக்கிறேன் என்று பிதுக்கும்போது தோல் பாதிக்கப்படும். இவ்வாறு அடிக்கடி ஓரிடத்தில் பருக்கள் தோன்றும்போது அந்த இடத்தில் அவற்றின் ‘வடுக்கள்’ தோன்றி முக அழகை பாதிக்கும். சிலருக்கு, முகடுகள் வெளியே வந்தபின்பு கூட குழி குழியாக தோலின் பகுதியில் விழுந்து அது விகாரத்தை ஏற்படுத்தும்.

மேற்கூறிய பாதிப்புகள் கொஞ்சம், கொஞ்சமாகவும், படிப்படியாகவும் தோன்றி வரும். சிலருக்கு ஒரே நேரத்தில் மேற்கூறிய பல்வேறு அமைப்புகளுமே தோலில் ஏற்படவும் செய்யும்.

முகப்பரு தொந்தரவு ஒரே நாளில் தோன்றி முடியக்கூடிய விடயம் அல்ல. அது நீண்ட நாட்கள் வந்தவர்களுக்குத் தொந்தரவுகளை ஏற்படுத்தும். பெண்களுக்குக் குறிப்பாக, ‘மாதவிடாய்’ தொடங்குவதற்கு முன்பாக இவை அதிகரிக்கும். விடலை பருவத்தில் அதிகமாகத் தோன்றினாலும் 20 வயதை நெருங்குகின்றபோது இதன் பாதிப்பு கொஞ்சம், கொஞ்சமாகக் குறைந்து வரும். முகத்தைக் குறிப்பாக யுவதிகளின் முகத்தைப் பாதித்து அவர்களின் மனநிலையையும் இது பெரிதும் பாதித்து விடுகிறது. முகப்பருக்களில் பல்வேறு வகைகள் இருக்கின்றன.

## மழலைகளுக்கு வரும் முகப்பரு

மழலைகளுக்கும், சிறுவர் சிறுமியர்களுக்கும் தோன்றும் முகப்பரு இவர்களுக்கு பெரும்பாலும் வெண்முகடு கொண்ட பருக்கள் முகத்தில் தோன்றும். இவர்களுக்கு அவை பழுக்காது கொப்பளங்களாகவும் உருவாகாது பிறந்தவுடன் தாயின் ஹோர்மோனின் அளவு இவர்களது உடலில் மிகுந்திருப்பதே இதற்கான காரணம் என்று கண்டறியப்பட்டுள்ளது. மேலும், மிகவும் அடர்த்தியான எண்ணெய்யை இவர்களது மென்மையான தோலில் (தலையிலும், முகத்திலும்) தடவுவதாலும் இது ஏற்படலாம்.



## வயது முதிர்ந்தவர்களுக்கு ஏற்படும் முகப்பரு

வயதானவர்களுக்கு, தனித்தனியாகவோ, மொத்தமாகவோ, முகப்பருக்கள் தோன்றலாம். இவை பெரும்பாலும் தலையின் பக்கவாட்டிலும், கண்களைச் சுற்றி அமைந்துள்ள பகுதியிலும் ஏற்படும்.

## பெரியவர்களுக்கு ஏற்படும் முகப்பரு

இது முகத்திலும், உடலின் பிற பகுதிகளிலும் ஏற்படலாம். சாதாரணமாக தொடங்கி பல்வேறு நிலைகளிலும் இது பாதிப்புகளை ஏற்படுத்தலாம்.

## குறிப்பிட்ட வேலை பார்ப்பவர்களுக்கு ஏற்படும் முகப்பரு

பல்வேறு இரசாயனத் தொழிற்சாலைகளில் பணிபுரிபவர்களுக்கு முகப்பரு தோன்றுவதுண்டு. குறிப்பாக, குளோரின் எண்ணெய் போன்றவற்றில் பணிபுரிபவர்களுக்கு முகத்திலும், உடலின் பல்வேறு பகுதிகளிலும் பருக்கள் தோன்றலாம்.

இதுபோன்று, பல்வேறு நாட்டு மருந்துகளை தலைக்கும், முகத்திற்கும் போடுவதாலும் முகப்பருக்கள் தோன்றலாம். சிலருக்கு முகத்தில் கொப்பளங்களும் ஏற்படும்.

## மருந்துகளால் ஏற்படும் முகப்பரு

அயோடைட்ஸ், புரோமைட்ஸ் போன்ற மருந்துகளை பயன்படுத்துகின்றபோதும் முகப்பருக்கள் தோன்றலாம். இவை தோன்றும் பகுதிகளில் அரிப்பும் இருக்கும். ஆனால் இவை பெரிதாகி கட்டிகளாக மாறுவதில்லை.

பல்வேறு ஹோர்மோன் மருந்துகள் மற்றும் ‘ஸ்டிராய்டு’ மருந்துகளாலும் முகத்தில் பருக்கள் தோன்றும்

குறிப்பாக ‘டெஸ்டோஸ்டிரான்’ எனப்படும் ஆணின ஹோர்மோன் மருந்தை ‘மார்பக புற்றுநோய்க்காக’ பெண்கள் பயன்படுத்துகின்றபோதும், ‘ஸ்டிராய்டு வகை மருந்துகளை ‘மூட்டு வாதத்திற்காக பயன்படுத்துகின்ற போதும் பெண்களுக்கு முகப்பருக்கள் தோன்றும்

## முகப்பரு ஏற்படுவதற்கான காரணங்கள்

முகப்பருக்கள் பெரும்பாலும் பருவமடைகின்றபோதுதான் அதிகமாக ஏற்படுகிறது. இதற்கு அந்த நேரத்தில் தோன்றும் ‘ஹோர்மோன்களே’ காரணமென கருதப்படுகிறது. குறிப்பாக, ஆணின ஹோர்மோன் ‘டெஸ்டோஸ்டிரான்’ மற்றும் பெண்ணின ஹோர்மோன் ‘புரோஜஸ்டிரான்’ ஆகியவற்றின் செயற்பாட்டினால் முகப்பருக்கள் அதிகமாக ஏற்படுகின்றன. இவை சர்ம (மெழுகு) எண்ணெய் சுரப்பிகளை பெரிதாக்கி விடுகின்றன. இதனால் அவர்களுக்கு அதிகமாக முகப்பருக்கள் ஏற்படும். தலையில் ‘பொடுகின்’ தொந்தரவுகள் உள்ளவர்களுக்கும் ‘முகப்பரு’ ஏற்படும். உணவில் அதிகமானளவு மாப்பொருட்கள், கொழுப்புச் சத்துப் பொருட்கள் ஆகியவற்றை சாப்பிடுகின்றவர்களுக்கு இது அதிகமாக ஏற்படும்.

மலச்சிக்கல் உடையவர்களுக்கும், உனவக்குழல் ஜீரண பாகங்களில் முறைகேடுகள் உள்ளவர்களுக்கும் இது அதிகமாக ஏற்படும்.

உடற்பயிற்சி செய்யாதவர்களுக்கும் வேலைப் பளு அதிகமாக இல்லாதவர்களுக்கும் இது அதிகமாக ஏற்படும். முகத்தில் அதிகமாக எண்ணெய் பசை நிறைந்து கிரீம்களை தடவுவதாலும் முகத்தை அடிக்கடி தேய்ப்பதாலும் இது ஏற்படும்.

## முகப்பருவிற்கான சிகிச்சைகள்:

## பொது சுகாதாரம்

இந்த பாதிப்புடைய பெண்கள் கடுமையாக வேதனைப்படுவார்கள். அய்யோ முகமே போச்சே என்று வருத்தப்படுவார்கள். முதலில் இதைப் போக்கவேண்டுமென வருத்தத்தாலும், அவர்களின் மன இறுக்கத்தாலுமே முகப்பருக்கள் அதிகரிக்கலாம்.

முகத்தை அடிக்கடி கழுவி சுத்தமாக வைத்திருக்க வேண்டும். உடலின் பொது ஆரோக்கியத்தை மேம்படுத்த வேண்டும்.

## விட்டமின் ‘ஏ’ சிகிச்சை

விட்டமின் ‘ஏ’ தோலில் ஏற்படும் மாற்றங்களை தடுத்து நிறுத்தக்கூடியது என்று கருதப்படுவதால் இதனை தினமும் தொடர்ந்து பல வாரங்கள் எடுக்க வேண்டும்.

## ஹோர்மோன் சிகிச்சை

மோசமாக முகம் பாதிக்கப்பட்டிருந்தால் சிலருக்கு இஸ்டிரோஜீன் ஹோர்மோனை தினமும் 1 மில்லி கிராம் என்றளவில் பெண்கள் எடுக்க வேண்டும். இது மாதவிடாய்க்கு முன்பாக ஏற்படும் முகப்பருக்களைத் தடுக்கும்.

ஆணின ஹோர்மோனுக்கு எதிராக செயற்படக்கூடிய சைபிரோஸ்டிரோன் ‘அஸிட்டேட்’ என்ற மருந்தை ஆண் பெண் இருவருக்கும் கொடுக்கலாம். கர்ப்பத்தடை மாத்திரைகளும் முகப்பருவை போக்க உதவும்.



5ஆவது வருடத்தை நோக்கி நகரும்

# “நீதிக்கான ஏக்கம்”



ஜே.ஏ.ஜோர்ஜ்

“திடீரென சத்தமொன்று கேட்டது. ஒரு கணம் என்ன நடந்தது என்றே தெரியவில்லை. நான் கண்ணைத் திறந்து பார்த்தபோது, எனக்கு அருகில் காயமடைந்து விழுந்த எனது தம்பியை அங்கிருந்தவர்கள் முச்சக்கரவண்டியில் ஏற்றியதைப் பார்த்தேன். பின்னர் என தம்பி கொழும்பு தேசிய வைத்தியசாலையில் உள்ளதை இரண்டு நாட்களுக்குப் பின்னரே என்னால் அறிந்துகொள்ள முடிந்தது. இரண்டு நாட்களாகத் தம்பியைப் பற்றி எந்த தகவலும் இல்லை” இவ்வாறு தனது கதையைப் பகிர்ந்து கொள்கிறார் கட்டுவாப்பிட்டிவில் வசிக்கும் 22 வயதான தினுக்கி கௌசல்யா.

2019ஆம் ஆண்டு ஏப்ரல் 21ஆம் திகதி நீர்கொழும்பு கட்டுவாப்பிட்டிய தேவாலயத்துக்கு வழமைபோலவே தனது தம்பியான சயூரு சத்சரவுடன் சென்ற தினுக்கி கௌசல்யா, வழிபாடுகளில் ஈடுபட்டுள்ளார். திருப்பலின் நிறைவில் யாரும் எதிர்பார்க்காத நேரத்தில் நிகழ்ந்த அந்த அசம்பாவிதம் இன்று தினுக்கி கௌசல்யாவின் வாழ்க்கையை அப்படியே புரட்டிப்போட்டு விட்டது.

சிறுவயதிலேயே தாய் கைவிட்டு சென்ற நிலையில், தனது தந்தை, தம்பி மற்றும் தந்தையின் தாயுடன், வசித்து வருகிறார் இந்த தினுக்கி கௌசல்யா. தந்தை கூலி வேலை செய்பவர், தந்தையின் தாய் நீண்டகால நோயினால் பாதிக்கப்பட்டவர். இந்த நிலையில், அவர்களுடன் தனது தம்பியைப் பராமரிக்கும் முழு பொறுப்பும் இப்போது அந்த தினுக்கி கௌசல்யாவிடமே இருக்கின்றது.

தனது தம்பியைக் கவனித்துக்கொள்ள வேண்டும் என்பதற்காக சாதாரண தரத்துடன் தனது படிப்பினை நிறுத்த வேண்டிய நிலைக்குத் தான் ஆளானதாகத் தெரிவிக்கும் தினுக்கி கௌசல்யா, தனது தம்பி முழுமையாகக் குணமடைய வேண்டும் என்ற ஆசையுடன், தொடர்ந்து வறுமையுடன் போராடி வருகின்றார்.

அப்போது 9 வயதான சிறுவனாக, அக்காவுடன் மகிழ்ச்சியாகத் தேவாலயத்துக்குச் சென்ற சயூரு சத்சர, தனது தலையில் ஈய உருண்டைகளைச் சுமந்த வண்ணம் சுமார் ஒன்றரை மாதங்களுக்குப் பின்னரே வீடு திரும்ப நேரிட்டுள்ளது. நான்கு வருடங்கள் கடந்தும் இன்றும் மாதம் ஒருமுறை கொழும்புக்குச் சென்று மருத்துவம் பார்க்க வேண்டிய நிலையில், தனது ஒரு கை கால்கள் சீராகச் செயற்படாததால், உடை மாற்றுவதற்கும் கழிவறைக்குச் செல்வதற்கும் கூட இன்று மற்றவர்களின் உதவியை நாட வேண்டிய நிலையில் சயூரு சத்சரவின் நாட்கள் நகருகின்றன.

“குண்டு தாக்குதலில் காயமடைந்த பின்னர் சுமார் ஒன்றரை மாதங்கள் சத்சரவை வைத்தியசாலையில் வைத்திருந்தார்கள். பின்னர் சில மாதங்கள் கழித்து மற்றுமொரு சத்திர சிகிச்சைக்காக மீண்டும் ஒன்றரை மாதங்கள் வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெற்றோம்” என கூறும் தினுக்கி கௌசல்யா, தற்போதும் மாதாந்தம் கொழும்புக்கு கிளினிக் சென்று வர 10ஆயிரம் ரூபாய்க்கும் அதிகப் பணம் தேவை என்றும் கூறுகின்றார். பணம் கிடைக்காத சந்தர்ப்பங்களில் அவர்களால் கிளினிக் செல்ல முடிவதில்லை.

“இந்த பிள்ளையின் எதிர்காலத்தை நினைத்தால் எனக்கும் அச்சமாகவும் அழுகையாகவும் வருகிறது. எங்கள் காலத்துக்குப் பின்னர் தனது தம்பியுடன் இவள் எப்படி வாழ்க்கையைச் சமாளிக்கப் போகிறாள்... கடவுளே இந்த பிள்ளைக்கு நீதான் ஒரு வழியைக் காட்ட வேண்டும்” - இவ்வாறு தனது மன வேதனை அங்கலாய்ப்பாக வெளிப்படுத்துகின்றார் தினுக்கி கௌசல்யாவின் 68 வயது பாட்டி.

குண்டு தாக்குதலுக்குப் பின்னர் தேவாலயத்தினால் அமைத்துக்கொடுக்கப்பட்ட வீட்டில் தனது குடும்பத்துடன் வசித்து வருகின்றார் தினுக்கி கௌசல்யா. குண்டு தாக்குதலில் காயமடைந்த அக்கா மற்றும் தம்பிக்கு ஆரம்பத்தில் அரசாங்கத்தால் வழங்கப்பட்ட சிறிதளவான கொடுப்பனவுக்குப் பின்னர் இதுவரை எந்தவிதமான உதவிகளும் கிடைக்கவில்லை என்று அந்தக் குடும்பத்தினர் கூறுகின்றனர்.

தாக்குதலுக்கு உள்ளாகி 4 வருடங்கள் கடந்திருந்தாலும் அந்த சிறுவனின் கண்களில் உள்ள அச்சம் மற்றும் இறுக்கம் இதுவரை நீங்கவில்லை. புதியவர்களைக் கண்டால் சயூரு சத்சரவின் கண்களில் மிரட்சிதான் மிஞ்சுகின்றது.


கட்டுவாப்பிட்டிய தேவாலயத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் பாதிக்கப்பட்ட சுமார் 15 குடும்பத்தினர், அங்கு அமைக்கப்பட்டுள்ள குடியிருப்பு தொகுதியில், தங்கள் இழந்த சொந்தங்களை நினைத்துக்கொண்டு வேதனையுடன் வாழ்ந்து வருகின்றனர். அந்த குடியிருப்பு தொகுதியைப் பார்க்கும்போது, ஏப்ரல் குண்டுத் தாக்குதலில் கொடூரத்தை இன்றும் நினைவுபடுத்துவதாக உள்ளது.

5 ஆண்டுகள் நிறைவை நோக்கி ஏப்ரல் 21, 2019 அன்று முழு நாட்டையும் உலுக்கிய ஈஸ்டர் ஞாயிறு பயங்கரவாத குண்டுவெடிப்புகளின் 5ஆவது ஆண்டு நிறைவை இலங்கை நினைவுகூர இன்னும் சில மாதங்களே உள்ளது. இருந்தும் இதில் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் இன்னும் அந்த நினைவுகளில் இருந்து மீளவில்லை.

கொழும்பு, நீர்கொழும்பு மற்றும் மட்டக்களப்பில் உள்ள தேவாலயங்களில் மேற்கொள்ளப்பட்ட ஒருங்கிணைந்த தொடர் குண்டுவெடிப்புகளில் கிட்டத்தட்ட 300 பேர் இறந்ததுடன், நூற்றுக்கணக்கானோர் காயமடைந்தனர்.

(திங்கட்கிழமை தொடரும்)














கம்போடியா

# தினமும் 4 பேருக்கு எச்.ஐ.வி தொற்று பாதிப்பு

தெற்கு ஆசிய நாடான கம்போடியாவில் ஒவ்வொரு நாளும் சுமார் 4 பேர் எச்.ஐ.வி. நோயால் பாதிக்கப்படுகின்றனர் என்று தேசிய எய்ட்ஸ் ஆணையம் தெரிவித்துள்ளது.



மேலும் அந்த அறிக்கையில், “கம்போடியாவில் ஆண்டுக்கு ஏறத்தாழ 1,400 பேர் புதிதாக எச்.ஐ.வி. நோயால் பாதிக்கப்படுகின்றனர் அல்லது ஒரு நாளைக்கு சுமார் 4 பேர் இந்த எச்.ஐ.வியால் பாதிக்கப்படுகின்றனர். மேலும் எச்.ஐ.வியால் புதிதாக பாதிக்கப்பட்டவர்களில் 42 சதவீதம் பேர் 15 முதல் 24 வயதுக்குட்பட்ட இளைஞர்கள். தென்கிழக்கு ஆசிய நாட்டில் தற்போது சுமார் 76 ஆயிரம் பேர் எச்.ஐ.வியுடன் வாழ்ந்து வருகின்றனர்” என தெரிவித்துள்ளது.

எச்.ஐ.வி. தொற்றானது, கடந்த 1991ஆம் ஆண்டு கம்போடியாவில் முதன்முதலில் கண்டறியப்பட்டமை குறிப்பிடத்தக்கது.




# ஆப்கானிஸ்தானை வெள்ளையடித்த இலங்கை

ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரில் ஆப்கானிஸ்தானை இலங்கை வெள்ளையடித்துள்ளது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலிரண்டு போட்டிகளையும் வென்ற இலங்கை, பல்லேகலவில் நேற்று முன்தினம் நடைபெற்ற மூன்றாவது போட்டியையும் வென்றமையைத் தொடர்ந்தே 3-0 என ஆப்கானிஸ்தானை வெள்ளையடித்தது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: ஆப்கானிஸ்தான்

ஆப்கானிஸ்தான்: 266/10 (48.2 ஓவ.) (துடுப்பாட்டம்: ரஹ்மத் ஷா 65 (77), அஸ்மதுல்லாஹ் ஓமர்ஸாய் 54 (59), ரஹ்மனுல்லாஹ் குர்பாஸ் 48 (57), இக்ரம் அலிகில் 32 (38) ஓட்டங்கள். பந்துவீச்சு: பிரமோத் மதுஷன் 3/45, டுனித் வெல்லலாகே 2/38, அசித பெர்ணாண்டோ 2/44, அகில தனஞ்சய 2/54)

இலங்கை: 267/3 (35.2 ஓவ. ) (துடுப்பாட்டம்: பதும் நிஸங்க 118 (101), அவிஷ்க பெர்ணாண்டோ 91 (66), குசல் மெண்டிஸ் 40 (29) ஓட்டங்கள். பந்துவீச்சு: கேய்ஸ் அஹ்மட் 2/46, மொஹமட் நபி 1/46)

போட்டியின் நாயகன்: பதும் நிஸங்க

தொடரின் நாயகன்: பதும் நிஸங்க



அமெரிக்கா

# 70 ஆண்டுகள் பழைமையான காதல் கடிதம்

அமெரிக்காவின் மிச்சிகன் மாகாணத்தைச் சேர்ந்த ரிக் ட்ரோஜனோவ்ஸ் என்பவர் கடந்த 2017ஆம் ஆண்டு ஒரு பழைய கருவிப்பெட்டியை ஏலத்தில் வாங்கியுள்ளார். அந்த பெட்டியில் சுமார் 70 ஆண்டுகள் பழைமையான காதல் கடிதம் ஒன்று இருப்பதை ரிக் தற்போது கண்டுபிடித்துள்ளார். அந்த கடிதம் இர்வின் பிளெம்மிங் என்ற ஒரு இராணுவ அதிகாரியால் எழுதப்பட்டுள்ளது.

சான் பிரான்சிஸ்கோவில் இருந்து வந்துள்ள அக்கடிதத்தில், “கடந்த கால சண்டைக்காக மன்னிப்பு கேட்கிறேன். விரைவில் வந்து உன்னை திருமணம் செய்து கொள்கிறேன்” எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேரி கிரிப்ஸ் என்ற பெண்ணுக்கு இராணுவ அதிகாரி பிளெம்மிங் இந்த கடிதத்தை எழுதியதாக தெரிகிறது. இதையடுத்து தற்போது இந்த கடிதத்தை உரியவரிடம் சேர்க்க ரிக் ட்ரோஜனோவ்ஸ் முயற்சித்து வருகிறார்.

இந்தோனேசியா

## பெறுபேறுக்கு முன்னரே வெற்றியை அறிவித்த பிரபோவோ

இந்தோனேசியாவில் ஜனாதிபதி தேர்தல் நடந்து முடிந்துள்ளது.

அதில் பாதுகாப்புத்துறை அமைச்சராக உள்ள பிரபோவோ சுபியாண்டோ, முன்னாள் மாகாண கவர்னர்களான அனீஸ் பஸ்லேடன், கஞ்சர் பிரனோவோ ஆகியோர் ஜனாதிபதி வேட்பாளர்களாக போட்டியிட்டனர்.

20 கோடி வாக்காளர்களை கொண்ட இந்தோனேசியாவில் புதன்கிழமை (14) காலை முதல் விறுவிறுப்பான வாக்குப்பதிவு நடந்து முடிந்தது. வாக்குகள் உடனடியாக எண்ணப்பட்டு வருகின்றன.

தேர்தலில் வெற்றி பெற ஒரு வேட்பாளர் 50 சதவீத வாக்குகளை பெற வேண்டும். பெரும்பான்மை நிரூபிக்கப்படாத பட்சத்தில் 2ஆம் கட்ட தேர்தல் ஜூனில் நடக்கும். இருப்பினும் முதற்கட்ட வாக்கு எண்ணிக்கையில் பாதுகாப்புத்துறை அமைச்சர் பிரபோவோ முன்னிலையில் இருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

இதனிடையே புதன்கிழமை (14) மாலை வாக்கு எண்ணிக்கை பணிகள் நடைபெற்றன. ஆனாலும் அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியாகவில்லை. இந்நிலையில், அன்றைய தினமே பாதுகாப்பு அமைச்சர் பிரபோவோ தான் வெற்றி பெற்றதாக மக்கள் முன்னிலையில் அறிவித்துக் கொண்டார். இதனைத் தொடர்ந்து தொண்டர்கள் மத்தியில் பேசிய அவர், “ இந்த வெற்றி அனைத்து இந்தோனேசிய மக்களுக்கும் கிடைத்த வெற்றியாக இருக்கும்” என தெரிவித்துள்ளார்.



சம்பியன்ஸ் லீக்:

# பயேர்ண் மியூனிச்சை வென்ற லேஸியோ

ஐரோப்பிய கால்பந்தாட்டச் சங்கங்களின் ஒன்றியத்தின் சம்பியன்ஸ் லீக் தொடரில், இத்தாலிய சீரி ஏ கழகமான லேஸியோவின் மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் ஜேர்மனிய புண்டெலிஸ்கா கழகமான பயேர்ண் மியூனிச் 0-1 என்ற கோல் கணக்கில் தோற்றது.

லேஸியோ சார்பாகப் பெறப்பட்ட கோலை சிரோ இம்மொபைலி பெற்றிருந்தார்.



தென்னாபிரிக்காவுக்கெதிரான இரண்டாவது டெஸ்டில் வெல்வதற்கு

## நியூசிலாந்துக்கு 227 ஓட்டங்கள் தேவை

தென்னாபிரிக்காவுக்கெதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் நியூசிலாந்து வெல்வதற்கு 9 விக்கெட்டுகள் கைவசம் இருக்கையில் 227 ஓட்டங்களைப் பெறவேண்டியுள்ளது.

இரண்டு போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியை நியூசிலாந்து வென்ற நிலையில், ஹமில்டனில் கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பித்த இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா தமது முதலாவது இனிங்ஸில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 242 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் ருவான் டீ ஸ்வார்ட் 64, டேவிட் பெடிங்ஹாம் 39, ஷோன் வொன் பேர்க் 38, றேனார்ட் வான் தொண்டர் 32, அணித்தலைவர் நீல் பிராண்ட் 25 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில், வில்லியம் ஓ ரூர்கே 4, றஷின் றவீந்திர 3 மற்றும் நீல் வக்னர், டிம் செளதி, மற் ஹென்றி ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர்

பதிலுக்கு தமது முதலாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து சகல விக்கெட்டுகளையும் இழந்து 211 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில், கேன் வில்லியம்சன் 43, டொம் லேதம் 40, வில் யங்க் 36, வக்னர் 33, றவீந்திர 29 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில், டேன் பீடிட் 5, டேன் பற்றர்சன் 3, தெஷெபோ மொரெகி ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

இந்நிலையில் தமது இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா சகல விக்கெட்டுகளையும் இழந்து 235 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில், பெடிங்ஹாம் 110, கீகன் பீற்றர்சன் 43, பிராண்ட் 34 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில், ஓ ரூர்கே 5, கிளென் பிலிப்ஸ் 2 மற்றும் ஹென்றி, றவீந்திர, வக்னர் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.


அந்தவகையில் 267 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு தமது இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடி வரும் நியூசிலாந்து, நேற்றைய மூன்றாம் நாள் ஆட்ட முடிவில் ஒரு விக்கெட் இழப்புக்கு 40 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. களத்தில் லேதம் 21 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமலுள்ளார்.

வீழ்த்தப்பட்ட விக்கெட்டை பீடிட் வீழ்த்தியிருந்தார்.




# அடுத்த உலகக் கிண்ணத்திலும் றோஹித்தே தலைவர்

இவ்வாண்டு நடைபெறவுள்ள சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு-20 உலகக் கிண்ணத் தொடரிலும் இந்தியாவுக்கு றோஹித் ஷர்மாவே தலைமை தாங்குவாரென இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் செயலாளர் ஜே ஷா நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.



கடந்த இருபதுக்கு -20 உலகக் கிண்ணத் தொடருக்குப் பின்னர் இருபதுக்கு -20 சர்வதேசப் போட்டிகளில் பங்கேற்றிருக்காத ஷர்மா, இவ்வாண்டு ஜனவரி மாதம் நடைபெற்ற ஆப்கானிஸ்தானுக்கெதிரான தொடரின்போதே அணிக்குத் திரும்பியிருந்தார்.

இதேவேளை நீண்ட எதிர்காலத்தில் இந்திய அணிக்கு ஹர்திக் பாண்டியா தலைமை தாங்குவாரென்ற கருத்தையும் ஷா வெளிப்படுத்தியிருந்தார்.

ஆந்திரா

## “எக்ஸ்போசாட்” மூலம் தகவல்கள் சேகரிப்பு



விண்வெளியில் உள்ள நிறமாலை, தூசு, கருந்துளை வாயுக்களின் மேகக்கூட்டமான ‘நெபுலா’ உள்ளிட்டவற்றை ஆராய, இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிலையம் இஸ்ரோ திட்டமிட்டிருந்தது. இதற்காக ‘எக்ஸ்போசாட்’ என்ற செயற்கைகோளை இஸ்ரோ வடிவமைத்திருந்தது.

இதனை ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி ஆய்வு மையத்தில் உள்ள முதலாவது ஏவுதளத்தில் இருந்து, கடந்த மாதம் 1ஆம் திகதி பி.எஸ்.எல்.வி. சி-58 ரொக்கெட் மூலம் இஸ்ரோ வெற்றிகரமாக விண்ணில் ஏவியது. பூமியில் இருந்து 650 கி.மீ உயரத்தில் புவி வட்டப்பாதையில் செயற்கைகோள் நிலை நிறுத்தப்பட்டது.

அதில் இருந்து தற்போது விண்வெளி தரவுகள் சேகரிக்கப்பட்டு வருகிறது.

இதுகுறித்து இஸ்ரோ விஞ்ஞானிகள் கூறும்போது, “இஸ்ரோவால் விண்ணில் ஏவப்பட்ட ‘எக்ஸ்போசாட்’ செயற்கைகோள், பூமியில் இருந்து 650 கிலோ மீட்டர் உயரத்தில் குறைந்த புவி சுற்றுப்பாதையில் இயங்கி வருகிறது. இதில் இந்திய எக்ஸ்ரே ‘போலரிமீட்டர்’ (போலிக்ஸ்) மற்றும் எக்ஸ்ரே ‘ஸ்பெக்ட்ரோஸ்கோபி’ ஆகிய 2 கருவிகள் உள்ளன.

இதில் ‘போலிக்ஸ்’ என்ற கருவி வாயுக்களில் உள்ள மேகக்கூட்டங்கள் குறித்து ஆய்வு செய்து விண்மீன் மண்டலத்தில் உள்ள தரவுகள், புகைப்படங்களை சேகரித்துள்ளது” என தெரிவித்துள்ளனர்.

ஒடிசா

தகனம் செய்வதற்கு முன்

## திடீரென கண் விழித்த பெண்

ஒடிசா மாநிலம், கஞ்சமின் மாவட்டத்தில் உள்ள பெர்ஹாம்பூர் நகரில் வசிப்பவர் புஜ்ஜி அம்மா (52). வீட்டில் ஏற்பட்ட தீ விபத்தால், அவரது உடலில் 50 சதவிகிதத்துக்கும் மேல் தீக்காயம் ஏற்பட்டிருக்கிறது. உடனே அவரை மீட்ட அவரின் குடும்பத்தார், எம்.கே.சி.ஜி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் தீவிர சிகிச்சைக்காக அனுமதித்திருக்கின்றனர். அவருக்கு சிகிச்சையளித்த மருத்துவர்கள், உயர் சிகிச்சைக்குத் தனியார் மருத்துவமனையில் அனுமதிக்க அறிவுறுத்தியிருக்கின்றனர்.

ஆனால், ஏழ்மையான குடும்பம் என்பதால் தனியார் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லாமல் வீட்டுக்குக் கொண்டு வந்தனர். இதற்கிடையில், வீட்டிலேயே உயிருக்குப் போராடிக்கொண்டிருந்த புஜ்ஜி அம்மாள், கடந்த 12ஆம் திகதி திடீரென மூச்சுப்பேச்சற்று இருந்திருக்கிறார். இதனால் அவர் இறந்திருக்கக்கூடும் என நினைத்த குடும்பத்தார், இறுதிச்சடங்குக்கான ஏற்பாடுகளையும் செய்திருக்கின்றனர்.

அவர் இறந்ததை மருத்துவரிடம் அணுகி உறுதி செய்யாமல் புஜ்ஜி அம்மா சடலத்தை மயானத்துக்கு வாகனத்தில் வைத்து எடுத்துச் சென்றிருக்கின்றனர். தகனம் செய்வதற்கான பணிகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது, புஜ்ஜி அம்மா திடீரென கண்களைத் திறந்துபார்த்து எழுந்ததும் சூழ்ந்திருந்த புஜ்ஜியின் உறவினர்கள் பயம் கலந்த அதிர்ச்சியில் உறைந்துபோயுள்ளனர்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை 16, பெப்ரவரி 2024, இல. 08, ஹூணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.